மே - 2019


ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



50/=

"நம்மை இறைவன்
மன்னித்துள்ளது போல்,
நாமும் பிறரை
மன்னிக்க வேண்டும்"

# தொண்டன்

மே – 2019

மலர் - 51 இதழ் - 04


✤ ஆசிரியர்
அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ துணை ஆசிரியர்
பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு .................... 01
அருள்மிகப் பெற்றவரே .................... 02
மன்னிப்பு வேண்டுமா ...? .................... 04
மாற்றட்டும் மே நாள் .................... 05
கத்தோலிக்கத் திருமறை .................... 06
மனதை மாற்றுங்கள் .................... 07
சின்ன விசயங்கள் சிறந்த .................... 08
மாணவர் பக்கம் .................... 09
பாட்டி! பாட்டி!! .................... 10
சிலுவைகள் .................... 11
இலக்கிய மஞ்சரி .................... 13
தொழிலாளர்களின் தோழர் .................... 15
குழந்தைகள் மட்டும் .................... 16
கடுகுக் கதை .................... 17
மத அடிப்படைவாதத்தின் .................... 18
செபமாலை செபித்து .................... 20
நினைத்தால் பயம் .................... 21
ஆயரின் விசேட மடல் .................... 22
கிறிஸ்தவர்களைத் தாக்கிய .................... 24
என்னையும் கொன்றுவிடு .................... 25
வினாவிடைப் போட்டி .................... 26
திருவிவிலியம் கற்போம் .................... 27
அறிவை வளர்ப்போம் .................... 28


✷ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்) ✷


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=
ஆண்டுச் சந்தா :950/=
(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

## நான் அன்று இறந்திருந்தால் எப்படி இருக்கும்?

செய்தித்தாளைப் புரட்டிப் பார்க்கிறேன். கண்ணீர் அஞ்சலி அறிவிப்பில் பல புகைப்படங்கள். அதில் நானும் ஒருவன். ஒரு நிமிடம் யோசிக்கிறேன்.....

என்ன நடந்தது எனக்கு? கடவுளைத் தேடித்தானே நான் ஆலயத்திற்குப் போனேன். அவரைத் தேடிப்போன எனக்கு என்ன நடந்தது? எனக்குப் பக்கத்தில் இருந்த யாரையும் காணவில்லை. நான் கண்மூடி, சிதருண்டு, உருக்குழைந்து சவப்பெட்டிக்குள் அசைவின்றி .... அப்படியென்றால் நான் இறந்துவிட்டேனா? கதறினேன். என்னைச் சுற்றி கூட்டம். எல்லோரும் அழுதுகொண்டு நிற்கிறார்கள். எல்லோரும் சோகமாக கதறினார்கள். தெரிந்தவர்கள் உள்ளே வந்து என் உடலைப் பார்த்துவிட்டு போகிறார்கள். சிலர் என்னருகில் அமர்ந்துவிட்டார்கள். என் அம்மாவும் புலம்பி அழுகின்றார். எனது பிள்ளைகளுக்கு என்ன நடக்கிறது என்று தெரியாது. எல்லோரும் அழுகிறார்கள் என்பதற்காக அவர்களும் அழுகிறார்கள்.

என்ன செய்வது, அவர்களை விட்டுப் பிரிய முடியாது. நினைக்கவே கண்ணீர் வருகிறது. இதே மூளையில் நின்று அழுகிறவன் என் நண்பன். பகையை மறந்து என்னைப் பார்க்க வந்திருக்கின்றான். என்னைப் பார்த்து எல்லோரும் தேம்பித் தேம்பி அழுகிறார்கள். எனக்காகவா இந்தக் கண்ணீர்? எல்லோரும் அழுகிறார்களே! என்னை நேசித்த என் மனைவி எங்கே என்று நான் தேடுகிறேன்.... அவள் மட்டும் ஏன் அழவில்லை? அவளால் அழமுடியாது. அவளும் என்னருகில் இறந்து கிடக்கிறாள்.

அருகில் இருக்கும் கடவுள் படங்களைப் பார்க்கின்றேன். "கடவுளே, எனக்கு இன்னும் சில நாட்களைக் கொடுங்கள். வாழ ஆசையாக இருக்கிறது. என் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் மேல் எவ்வளவு அன்பு நான் வைத்திருக்கிறேன் என்று வெளிப்படுத்த". அவர்களை விட்டு பிரிவதை என்னால் தாங்க முடியாது. இனி இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது. இத்தோடு எல்லாம் முடிந்துவிட்டது. இனி இவர்களை எப்படிப் பார்க்க முடியும்? என்ற ஏக்கத்தோடு நிற்கின்றபோது. என்னைப் புதைப்பதற்கு எடுத்துச்செல்கிறார்கள் என் உறவினர்கள்.....

வேதனையோடு விடை பெறுகிறேன்......

வாழ்வது கொஞ்ச காலம்
சந்தோசமாக வாழுங்கள் ....
அன்பு செய்யுங்கள் .....
இருப்பதைப் பகிருங்கள் .....
குடும்பத்தை நேசியுங்கள் ......
அன்னை மரியின் பரிந்துரையால்
இறைவன் உங்களோடு துணை நிற்பாராக!

– அதிபர் –

" உங்களை தொடுகிறவன் என் கண்மணியை தொடுகிறான்.
நீங்கள் சும்மா இருங்கள் உங்களுக்காக நான் யுத்தம் செய்வேன்"

# மாதா வணக்க மாதம்






- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

உலகெங்கும் மறைப்பணியாளர்களை அனுப்பி, போற்றுதற்குரிய பணிகளால் புகழின் உச்சக்கு சென்ற நாடு 'போர்த்துக்கல்' என்றால் மிகையாகாது. அந்தத் திருநாட்டிலிருந்துதான் பல புனிதர்கள் தோன்றினார்கள். எடுத்துக்காட்டாக, கோடி அற்புதர் என்றும், நன்நாக்கு அழியாதவர் என்றும் போற்றப்படும் புனித பதுவை அந்தோனியார் தோன்றியது போர்த்துக்கல் நாட்டில்தான். இன்னும் எத்தனையோ புனிதர்கள், அருளாளர்கள், மறைசாட்சிகள் அந்நாட்டினை அணி செய்து அகிலத்தை நெகிழச் செய்துள்ளார்கள்.

போர்த்துக்கலில்தான் பாத்திமா எனும் நகரில் அன்னை மரியா ஆண்டவர் இயேசுவின் அன்புத் தூதராக ஆட்டிடைச் சிறாருக்குக் காட்சியளித்தார். முதல் உலகப் போரின் அபாய முழக்கங்கள் அவனியை அச்சுறுத்திக் கொண்டிருந்த வேளையிலே, 1917ஆம் ஆண்டு மே 13ம் நாள் அன்னை மரியா பாத்திமாவிலே தோன்றி பாலைவனமாக மாறிக் கொண்டிருந்த பாரோரின் வாழ்வைப் பக்திமிகு சோலையாக மாற்ற இறைவன் விடுத்த தூதாகக் காட்சி தந்தார். தொடர்ந்து மாதம் ஒரு முறையாக 6 முறை காட்சி தந்தார். ஆம், அந்தச் சிறார்கள் பிரான்சிஸ், ஜெசிந்தா, லூசியா (இவர் அண்மையில்தான் இறப்பை எய்தினார். மற்ற இருவரும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்).

**எமக்காகப் பரிந்துரைக்கும் அன்னை :**

எண்பது இலட்சம் உயிர்களைக் கொள்ளை கொண்ட முதல் உலகப் போரின் ஓலங்களுக்கு மத்தியில் நண்பகல் வேளையில், ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறார்களுக்கு அன்னை தோன்றினார். விசுவாசத்தில் சோர்ந்திருந்த மக்களை உசுப்பி எழுப்பி உயிரோட்டத்தைத் தரவேண்டும் என்ற பேரவா அன்னையின் காட்சிக்கு முதற்காரணமாயிற்று.

அடுத்த காரணம் ஓர் அழைப்பாக அமைந்துள்ளது. அதாவது தவ முயற்சி செய்து இந்தத் தரணியின் நல் வாழ்வுக்காக அர்ப்பணிப்பது. செபமாலை செபித்து பாவியர் மனந்திரும்பக் கையளிப்பது. அன்னை மரியாவின் மாசற்ற இதயக் குரலுக்குச் செவிசாய்ப்பது, அதன்மேல் காட்டும் பக்தியை அதிகரிப்பது. தொடர் காரணமாக உலக சமாதானம் பெருக மானிடர் அனைவரும் முன்முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். பாவம் செய்யக் கிடைக்கும் வாய்ப்பை உதறித் தள்ள வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இறை வேண்டல் செய்ய வேண்டும். இவைதான் அன்னை அளித்த காட்சிகளில் வைக்கப்பட்ட கருத்துக்களின் சுருக்கமாகும். இப்படி அன்னை மரியா காட்சிகளின் வழியாகத் தூதுரைத்து அகில மாந்தரின் வாழ்வு மாட்சி பெறத் துணை நின்றார்.

உலக மக்களின் தேவைகளை உள்ளுணர்ந்த அந்த அன்புத்தாய் மரியா, பல்வேறு இடங்களில் அந்தந்த இடத்துப் பெயர்களைத் தாங்கி காட்சியளித்து தம் மகன் சொல்வதைச் செய்து சகவாழ்வைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். அந்த அன்னையின் பரிந்துரை நம்மைப் பாதுகாப்புடன் வழிநடத்தட்டும்.

**மே மாத வணக்க மாதம் :**

வரலாற்று ஆதாரங்களின்படி 'மே' மாதத்தை 'மாதா வணக்க மாதமாகக்' கொண்டாடும் வழக்கம் 10ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரோமை நகரில் முதலில் தொடங்கப்பட்டுள்ளது. திருத்தந்தை 8ம் பத்திநாதர் மே மாதம் 'மரியன்னை வணக்கமாத' பக்தி முயற்சிக்கு பேருதவி புரிந்ததுடன், "மே மாதத்தில் தனியாகவோ, பொதுவாகவோ மரியன்னை பக்தி முயற்சியில் ஈடுபடுகிறவர்களுக்கு 300 நாள் பலன்கள் கிடைக்கும்" என்றும் அறிவித்தார். புனித அகுஸ்தினார், "தாய் கேட்பதை இறைமகன் ஒருபோதும் மறுப்பதில்லை. தேவமாதா தன் மன்றாட்டில் சர்வ வல்லமை மிக்கவர்" என்று கூறியுள்ளார். "அம்மா பற்றி எத்தனை நூல்கள், கவிதைகள், காவியங்கள் படைத்தாலும், அவை தாயன்பை முழுமையாக விளக்கிவிட முடியாது. அதுபோல், மரியா பற்றி எவ்வளவு சொன்னாலும் அது மிகையாகாது" என்று கூறுகிறார் புனித பெர்னார்து. கத்தோலிக்கத் திருச்சபையில் வலிமையான அடையாளங்களில் 'மரியா வணக்கம்' மகத்தானதும், தனித்துவமானதுமாகும். கத்தோலிக்கத் திருச்சபையின் 2000 ஆண்டுகள் வரலாற்றில் அன்னை மரியா பெற்றுள்ள இடம் பெரிது என்பதற்கு 'மே' மாதம் 'வணக்க மாதம்' என்று கொண்டாடுவதைக் குறிப்பிடலாம்.

**என் தாய் பேறு பெற்றவர் :**

மரியா - உலகமே கொண்டாடும் ஒரு தெய்வீகப் பெண். ஆண்டாண்டு காலமாய் பாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்த மனுக்குலத்தை மீட்டெடுக்க பரமன் தெரிந்து கொண்ட பூமியின் தேவதை. மாந்தரில் சிறந்தவள். பெண்களில் பேறு பெற்றவர். அவரை வாழ்த்தாமல் இருக்கும் நாவுகள் இருந்தும் பயனில்லை. திருச்சபை மரியாவை திருச்சபையின் தாய் எனவும், பெண்களின் முன்னுதாரணம் எனவும், எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவராகவும் வெளிப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறு மரியா மனுக்குலத்தால் கொண்டாடப்பட வேண்டிய பெண். அத்தோடு விண்ணகத்தில் உள்ள எல்லாப் புனிதர்களிலும் அன்னை மரியா உயர்ந்த வணக்கத்தைப் பெறுகின்றார். அதற்குக் காரணம், அன்னை மரியாள் கடவுளிடமிருந்து ஒரு சிறப்புப் பணியைப் பெற்றவர். கடவுளின் மீட்பு திட்டத்தில் கடவுளோடு நெருக்கமாகப் பயணித்தவர். கடவுளின் அருளால் முழுவதுமாக நிரப்பப்பட்டவர். இத்தகைய மேன்மை பொருந்திய மரியாவுக்கு உயரிய வணக்கம் செலுத்துவது மனுக்குலத்தின் கடமை.

மரியா பக்தி இயேசு வாழ்ந்த காலத்திலேயே இருந்தது என்பதை "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்!" (லூக் 11:27) என்று கூட்டத்தில் பெண் ஒருவர் இயேசுவை நோக்கிக் கூறியதைப் பார்க்கின்றோம். திருச்சபை தோன்றிய காலத்திலிருந்து அப்போஸ்தலர்களும், ஆதித்திருச்சபையும் மரியன்னை பக்தியை மையப்படுத்தியே கிறிஸ்தவ வாழ்வை அமைத்து வந்தனர். 'மே' மாதம் மட்டுமல்ல, ஆண்டவரின் தாய்க்கு ஆண்டு முழுவதும் வணக்கம் செலுத்தலாம்.

**நற்செய்தி அறிவிப்பு :**

புதிய ஏற்பாட்டின் அத்தனை நூல்களும் முதல் நூற்றாண்டின் பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்டன. அனைத்தும் முழு விவிலியமாக நூல் வடிவம் பெற்றது நான்காவது நூற்றாண்டில்தான். ஆக, புதிய ஏற்பாடு முழுவதுமே முதல் மூன்று நூற்றாண்டுகள் வாய் வழியாகவே பரப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டன. விவிலியமே திருச்சபைப் பாரம்பரியத்தின் வழியாக இறைவன் அளித்த ஒரு கொடையாகும். விவிலியத்தின் நற்செய்தியை அறிந்துகொள்ள திருச்சபையின் பாரம்பரிய மரபு அவசியம்.

இயேசு இறையாட்சி பற்றி மூன்று ஆண்டுகள் போதித்தாரே, எதையாவது எழுதி வைத்தாரா? இல்லையே! ஒரே ஒரு முறை எழுதினார்....

அதுவும் தரையில்! நற்செய்தி என்பது என்ன? தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு திருத்தூதர் எதனைப் போதித்தார்களோ, தொடக்ககால கிறிஸ்தவர்கள் என்ன விசுவசித்தார்களோ அதன் எழுத்து வடிவம்தான் நற்செய்தி! நற்செய்தி நூல்கள் விசுவாசத்தைத் தோற்றுவிக்கவில்லை. விசுவாசத்திலிருந்து பிறந்ததுதான் நற்செய்தி.

முதலில் திருச்சபை பிறந்தது. நற்செய்தியால் திருச்சபை பிறக்கவில்லை. விசுவாசம் எப்படி கடவுளின் கொடையோ, அதுபோல திருச்சபையை ஏற்படுத்தியவரும் கடவுளே! இந்தக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட கத்தோலிக்க திருச்சபைதான் புதிய மற்றும் பழைய ஏற்பாட்டு நூல்களில் உள்ளவை அனைத்தும் கடவுளால் ஏவப்பட்டு எழுதப்பட்டவை என்று உலகெங்கும் போதிக்கின்றது.

பல நூற்றாண்டுகளாக திருச்சபை ஆசிரியம் போற்றி வரும் மரியா வணக்கத்தின் பக்தி முயற்சிகளை, பழக்க வழக்கங்களை மறக்கவோ, மாற்றவோ யாராலும் முடியாது! மரியா வணக்கத்தை மிகவும் மதிக்க வேண்டும் என்கிறது சங்க ஏடு. "மீட்புத் திட்டத்தில் தூய கன்னி மரியா கொண்டுள்ள பங்கையும், மீட்கப் பெற்ற மக்கள் இறையன்பால் கொண்டுள்ள கடமைகளையும் திருச்சங்கம் கருத்துடன் விளக்குகிறது" (எண் 54).


அன்னை மரியா, வானதூதருக்கும், மனிதருக்கும் மேலாக கடவுளால் உயர்த்தப்பட்டவர். 'கடவுளின் தூய்மை மிக்க தாய்' என்று அறிக்கையிடுவோம். அன்னையின் ஒளிக்கதிர் வீச்சுக்களால் இருளில் வாழும் மக்கள் பேரொளியாகிய இயேசுவைக் காணட்டும்! அதுவே நமது நற்செய்தி அறிவிப்புப் பணி. அன்புப் பிள்ளைகளாக மாதா வணக்க மாதத்தில் மட்டுமல்ல, மரியாவுக்கு எந்நாளும் "அன்னைக்குக் கரம் கொடுப்போம்....." என்று புகழ்மாலை சூட்டி அன்னை மரியாவின் ஆதரவில் ஆண்டவரின் பிள்ளைகளாய் வாழ்வோம்! மரியே வாழ்க! ஆவே மரியா!

## மன்னிப்பு வேண்டுமா ....?



- நம்மை இறைவன் மன்னித்துள்ளதுபோல், நாமும் பிறரை மன்னிக்க வேண்டும் என நாம் மன்னிப்பின் வழியாக பெற்றுள்ள கொடை நமக்கு அழைப்பு விடுக்கிறது.
- பாவம் குறித்து வருந்தும் இதயத்துடன் நாம் இறைவனின் மன்னிப்பை வேண்டும்போது, அவர் எப்போதும் நம்மை மன்னிக்கிறார். அதே வேளை, நம்மை இறைவன் மன்னித்துள்ளது போல், நாமும் பிறரை மன்னிக்க வேண்டும் .
- இதை நாம் இரக்கமற்ற பணியாள் என்ற இயேசுவின் உவமையில் காண்கிறோம். தான் பட்டிருந்த பெரிய கடன் சுமை மன்னிக்கப்பட்ட பணியாள், தன்னிடம் மிகச் சிறிய கடனைக் கொண்டிருந்த ஒருவரை மன்னிக்க மறுத்ததைக் குறித்து இந்த உவமை எடுத்துரைக்கின்றது.
- இங்கு கூறப்பட்டுள்ள செய்தி மிகத் தெளிவானது. அதாவது, பிறரை நாம் மன்னிக்க மறுக்கும் போது, நம் பாவங்களும் மன்னிக்கப்படா என்பதே யாகும் அது. மன்னிப்பு எனும் விலைமதிப்பற்ற கொடையை மற்றவர்களுக்கு, வழி வழியாக விட்டுச்செல்லும் அருளை, இறைவன் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வழங்குகிறார்.





# மாற்றட்டும் மே நாள்

உலகெலாம் மே தினத்தை
உயர்ந்த மாதினமென் றேற்றும்
புலர்வுகண் டுழைக்கும் மாந்தர்
பூரிக்கும் நாளென் றாகின்
நிலமெலாம் வறுமை நீங்கி
நெஞ்செலாம் மகிழ்வே தேங்கும்
உலர்வது மாறி மண்ணில்
உழைப்பவர் வாழ்வோங்கட்டும்!

குறுகிய குடிசைக் கூண்டில்
குனிந்துறை கின்ற வாழ்க்கை
வறுமையின் தோழனாகி
வாழ்வெலாம் வாழ்தலாகி
நிறைவிலாத் துன்பச் சேற்றில்
நித்தமும் உழலு கின்ற
குறையது மலிந்த வாழ்க்கை
கொழித்தெழல் வேண்டும் நன்றாய்

நித்தமும் உழைத் துழைத்து
நிறை வயிற்றுக் குணவு மற்று
புத்துடை அணிவ தற்கும்
புள்ளைகள் ஏங்கித் தேம்பும்
சத்தான உணவு பானம்
சமைத்துண்ண வழியு மற்றுப்
பித்தராய்ப் பிதற்றும் ஏழ்மைப்
பிணியிருள் மாற்றட்டும் "மே நாள்!"



- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

## குறிப்புக்கள்!







- உருளைகிழங்கு வாங்கும்போது பச்சையாக இல்லாமல் பார்த்து வாங்கவும். உருளைக் கிழங்கு கெட்டியாகத் தோல் உரிந்திருந்தால் அது நல்ல உருளைக்கிழங்கு.
- வாழைக்காய் சமையல் உணவில் சேரும்பொழுது மிளகு, சீரகம் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் வாயு தொல்லை இருக்காது.
- கோதுமை மாவை கரைத்து அதில் ஒரு டம்ளர் மோர் ஊற்றி கரைத்து உடனே தோசை வார்க்கலாம்.
- காய்கறிகளை நறுக்கியபின் கழுவும்போது தண்ணீரில் சில வைட்டமின்கள் கரைந்து வீணாகிவிடுகிறது. எனவே காய்கறிகளை நறுக்குவதற்கு முன்பே நன்கு கழுவி விடுங்கள்.
- மீனை தாய்ச்சியில் போடுவதற்கு முன்பாக சிறிதளவு மஞ்சள் தூளை தாய்ச்சியில் தூவி பிறகு வறுத்தால் மீன் ஒட்டிக் கொள்ளாது.



# மூன்றாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி – I கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக :

01. திருமுழுக்குப் பெற்றோர் கிறிஸ்துவின்.......................................... பங்காளராகின்றனர்.
   1. பணிக்குருத்துவத்தில் 2. பொதுக்குருத்துவத்தில்
   3. மறைபணியில் 4. சீடத்துவத்தில்

02. பொதுக்குருத்துவத்தைப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் :
   A. மேய்ப்புப் பணி B. குருத்துவப்பணி
   C. இறைவாக்குப்பணி D. பொதுநிலைப்பணி
   1. A, B 2. B, C 3. C, D 4. A, B, C

03. இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது :
   1. மறையை அறிவித்தல் 2. போதனை 3. திருப்பலி 4. விவிலியத்தைப் போதித்தல்

04. கட்டிளமைப் பருவத்தில் இருப்போரின் வாழ்வை கட்டியெழுப்பி உறுதிபெறச் செய்வதற்கு அவசியமானது :
   A. திருப்பலி B. திருவிவிலியம் C. திருச்செபமாலை D. திருவருட்சாதனம்
   1. A, B 2. B, C 3. C, D 4. A, B, C

05. கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் செயற்படிமுறைகள்?
   A. பார்த்தல் B. தீர்மானித்தல் C. செயல் D. கேட்டல்
   1. A, B 2. B, C 3. C, D 4. A, B, C

06. தூய வின்சன் டி போல் சபையை ஆரம்பித்தவர் :
   1. பிறடிக் ஓசானம 2. வில்லியம் கபே
   3. தூய ஆசீர்வாதப்பர் 4. தூய பிரான்சிஸ் அசிசி

**பாடம் : 18**

07. பின்வரும் எபிரேய சொற்களின் கருத்தை தருக.
   'றதா' என்பதன் கருத்து :
   1. ஆளுதல் 2. பராமரிப்பு 3. உழைத்தல் 4. அன்புசெய்தல்

08. 'சபாத'ஸி என்பதன் கருத்து :
   1. உழைத்து உருவாக்கல் 2. பராமரித்தல்
   3. வழிநடத்தல் 4. அரவணைத்தல்

09. 'ஷாமார்' என்பதன் கருத்து :
   1. நறுமணம் 2. பராமரித்தல் 3. அன்பு செய்தல் 4. ஆளுதல்

10. 'பாதுகாத்தல்' என்பதற்கு பயன்படுத்தும் எபிரேயச் சொல்.
   1. ஷாமார் 2. றதா 3. அபாத் 4. ஆழுதல்

**பாடம் : 19**

11. 'சமாதானம்' என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் :
   1. அமைதி 2. ஷாலோம் 3. சலாம் 4. மன்னிப்பு

12. மனித வாழ்வைப் பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் அவசியமானது :
   1. ஒற்றுமை 2. சமாதானம் 3. போரின்மை 4. அபிவிருத்தி

– விடைகள் 10ம் பக்....

# மனதை மாற்றுங்கள்! வாழ்க்கையில் முன்னேறுங்கள்!



- ஜே.எச்.இரத்தினராஜா

இந்த உலகில் வெற்றியை நோக்கி வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் சோதனைகள் ஏற்படும். அப்படி சோதனை செய்வதில் முக்கியமான ஒன்றுதான் மனம். ஏனெனில், அந்த மனம் எப்போதுமே முதலில் எதிர்மறையாகத்தான் நினைக்கும். அவ்வாறு நினைப்பதால் யாராலும் வாழ்வில் நிச்சயம் முன்னேற முடியாது.

எப்போதும் மனதில் நேர்மறையாக யோசித்தால், எந்த ஒரு செயலையும் துணிந்து செய்யலாம். உதாரணமாக, நமது மனம் எதிர்மறையாக நினைக்கும்போது ஏதாவது ஒரு தோல்வி நடந்தாலும் அதை அவ்வளவு சீக்கிரம் மறக்காமல் இருக்கும். இதனால், எந்த ஒரு செயலைச் செய்யும்போதும் எங்கு தோல்வி கிடைக்குமோ என்று பயந்து இலகுவானவற்றைக்கூட இழக்க நேரிடுகிறது. ஆகவே, வாழ்வில் வெற்றியை நோக்கி முன்னேற என்னவெல்லாம் செய்யவேண்டுமென்று படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

வாழ்வில் முன்னேறும்போது நிறையப் பேர் என்னென்னவோ சொல்வார்கள்.

இதில் அதிகம் நம்மைப்பற்றி சொல்பவர்கள் யார் என்று பார்த்தால், குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், அயலில் உள்ளவர்கள் அல்லது ஆசிரியர்கள்தான். இவர்கள் சொல்வது நமது நலத்திற்காகவே இருக்கட்டும். ஏன், நாம் எதை விருப்பப்பட்டு செய்தாலும், மூக்கை அறுப்பதுபோல் நிறைய தடைகளைச் சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில் மனதைத் தளரவிடாமல் தன் எண்ணத்தில் மட்டும் முழு கவனத்தைக்கொண்டு வாழ்வை மேற்கொண்டால், வெற்றியை நிச்சயம் அடையலாம்.

எப்போதும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதைச் செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால், வெற்றியை அடையமுடியாது. ஆகவே, உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக்கேட்டு அதன்படி நடக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஏதேனும் ஒரு புதிய விடயங்களைச் செய்யும் போது மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதைக் கூட நீங்கள் முழு கவனத்தோடு செய்து முடிப்பீர்கள்.

எந்த நேரத்திலும் நீங்களே



முடிவெடுங்கள். இதுவரை சிறுவயதில் உங்களுக்கு உங்கள் வீட்டிலிருக்கும் பெற்றோர்கள் முடிவெடுப்பார்கள். இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம்தான் நீங்கள் சுயமாக உங்கள் முடிவுகளை எடுக்கவேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்யமுடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்கவேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது. சுயமாக முடிவு எடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இதுதான் மிகவும் முக்கியமான ஒன்று. மேலே குறிப்பிட்டதுபோல் வாழ்க்கையில் முன்னேறும் போது தோல்விகளைச் சந்தித்து தான் ஆகவேண்டும். அதற்காக அந்தத் தோல்விகளையே மனதில் வைத்துக்கொண்டு வாழ்க்கையில் இருக்கக்கூடாது. தோல்விதான் வெற்றியின் முதல் படி. தோல்விகளைச் சந்திக்கச் சந்திக்கத்தான் மனம் தெம்பாக, அனைத்தையும் எதிர்த்து நின்று, தைரியமாகச் செல்லமுடியும். இதனால் வெற்றியையும் எளிதில் அடையமுடியும். இன்றைய காலத்தில் அனேக மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனக் குறைவோடு, எதைப்பற்றியும் கவலையில்லாமல் இருக்கின்றனர். ஏனெனில், அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப்போவதில்லை. ஆனால், தோல்வியடைந்து விட்டால் மட்டும் அதை நினைத்து மனதைத் தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருப்பார்கள். ஆகவே, அவ்வாறு இல்லாமல், மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாகச் செயற்படவேண்டும்.

மேற்கூறியவாறெல்லாம் நடந்து வந்தால், வாழ்க்கையில் பெரிய வெற்றியை அடைவதோடு, வாழ்வில் ஒரு நல்ல நிலைக்கும் வரலாம். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. ■

## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

***எத்தனையோ கதவுகள் ...***

சிகாகோ நாட்டில் உள்ள பேருந்து நிலையத்தில் ஒரே வழித் தடத்தில் ஏராளமான பேருந்துகள் செல்லும். ஆனால், ஒரேயொரு பேருந்தில் கூட்டம் அலைமோதும். முந்தைய பேருந்துகளைத் தவிர்த்து விட்டு அந்தப் பேருந்துக்காக மக்கள் காத்திருப்பார்கள். அதிகாரிகள் ஆராய்ந்தபோது அந்த ஓட்டுனர் பாடிக்கொண்டே வாகனம் ஓட்டுவார் என்று தெரிந்தது. அவர் வாழ்வில் நல்ல பாடகராய் உருவாக நினைத்தார். சூழல் ஒத்துழைக்கவில்லை. கிடைத்த வேலையில் இருந்துகொண்டே தன் கனவை நனவாக்கினார். இப்போது அவரும் பிரபலமான பாடகர்தான்.


**கனவு நனவாக எத்தனையோ கதவுகள் இருக்கின்றன.**

***என் மனம்தான் ...***

காதைச் சுற்றும் கொசு, முகத்தில் மோதும் சில்வண்டு எல்லாம் தன் தியானத்திற்குத் தடையாய் இருப்பதாய் அந்த குருவிடம் முறையிட்டான் சீடன். "நன்கு யோசி, அதன்பின் உன்னை எது தொந்தரவு செய்கின்றதோ, அதன் முதுகில் சுண்ணாம்புக் கோடொன்று போடு" என்றார் குரு. மறுநாள் சீடன் வந்தான். தன் இதயத்தில் கோடு போட்டுக்கொண்டு "குருவே! நீங்கள் சொன்னதை உணர்ந்து கொண்டேன். என்னைத் தொந்தரவு செய்வது கொசுவோ சில்வண்டோ அல்ல. என் மனம்தான்" என்றான். மனதில்தான் எல்லாத் தடைகளும் மற்றவற்றில் அல்ல.

- ஜெ.எ.இரத்தினராஜா -

ஒன்றுக்குப் பதிலாய் ஓராயிரம் நாக்குகள் எனக்குத் தரப்பட்டு, அந்த ஓராயிரமும்
இருபது மடங்காய் பெருகினாலும், நான் நூறாயிரம் முறை சொல்வேன்:
"உலகின் அதிபதி கடவுள் ஒருவரே;
அவர் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பேன்" - குருநானக்





## கிறிஸ்தவம்
# மாணவர் பக்கம்

- நில்மினி கஜேந்திரன் -

க.பொ.த உயர்தரம்

**கல்வித்துறையில் திருச்சபையின் பங்களிப்பு:**

போர்த்துக்கேயர் வருகையுடன் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து செயற்படத் தொடங்கிய திருச் சபையானது, தன் ஆலய வழிபாடுகளோடு நின்றுவிடாமல், மறைபணிகளோடு, கலை கலாச்சார, நாடக, எழுத்து, கூத்து, கைத்தொழில், சமூக நலச் சேவைகள், உடல், உளச், சுகாதரச் சேவைகள் போன்ற பல துறைகளிலும் அர்ப்பணித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் இலங்கைத் திருச்சபை தன் அதிகூடிய பங்களிப்பினை கல்வித்துறைக்கே வழங்கியுள்ளமை யாவரும் அறிந்த உண்மையே. மூன்றாவது உலக நாடுகளில் இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் கல்வித் துறையில் 92% அறிவுடைய மக்களைக் கொண்டதாய் ஆசியாவிலே முதலிடம் பெற்றிருப்பது, கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் பங்களிப்பே என்றால் மிகையாகாது. போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் 16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போது கல்வித்துறை மிகவும் கீழான நிலையில் இருந்தது. ஒருசில புத்த விகாரைகள் மட்டுமே பாடசாலைகளாய் இயங்கின. இதில் பௌத்த பிக்குகளே கல்வி கற்றுவந்தனர். மேலும் செல்வாக்குப் பெற்ற ஒரு சில மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டார்கள். இங்கு சில எழுத்துக்களும் கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறுகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. பெண்கள் அறவே கல்வியறிவு அற்றவர் களாய் இருந்தனர்.

போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் வருகையுடன் இந்நிலைகள் அனைத்தும் மாற்றம் பெற்றது. இவர்களின் பணியானது ஆலயம், வழிபாடுகள் இவற்றோடு நின்று விடவில்லை. கல்விச்சேவை, சுகாதார சேவை, சமூக பிறர் நல சேவை போன்றவற்றிலும் பெரும்பங்காற்றின. குருக்களும் துறவியர்களும் பின் தங்கியவர்களும் பாடசாலை களை அமைத்து கல்வித்துறையில் அவர்களை ஈடுபடுத்தி மாணவ மாணவியர்களுக்கு சிறந்த கல்வியினை ஊட்டினர். குருக்கள் புதுக்கிறிஸ்தவர்களுக்கு கல்வியூட்டி மறைக்கல்வியினையும் வழங்கினர். கல்விப் பணியினூடாய் மறைபணி வழங்கப்பட்டது. இதனால்தான் கிறிஸ்தவத்தை தழுவிய கோட்டே அரசன் புவனேகபாகுவிடம் தன் மத தாபனங்களை, சிறப்பாகப் பாடசாலை களையும் அனாதை இல்லங்களையும் பராமரித்து நடத்த ஆலயக் காணிக்கை களின் வருவாயைக் கேட்டனர். ஒவ்வொரு பங்கிலும் ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு, காலையிலும் மாலையிலும் ஆண் பெண் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் மறைக்கல்வி அளிக்கப்பட்டது. பாடப் புத்தகங்கள் இல்லாத காரணத்தினால் அதிகமாக மனப்பாடம் செய்தும் வினாவிடை முறையிலும் போதிக்கப்பட்டு, பொதுவான வழிபாடுகளில் பயன்படும் செபங்களும் பாடல்க ளும் கற்பிக்கப்பட்டன. பின்னர் ஆரம்ப பாடசாலைகளில் வாசிப்பு, எழுதுதல், எண்ணுதல், மறைக்கல்வி போன்ற பாடங்கள் சுதேச மொழியில் கற்பிக்கப்பட்டன. மற்றும் ஆரம்பப் பாடசாலைகளை விட இரண்டு கொழும்பிலும் இரண்டு யாழ்ப்பாணத்திலுமாய் நான்கு கல்லூரிகள் அமைக் கப்பட்டன. இங்கு உயர்தர மறைக்கல்வி, நற்பண்புகள், இலத்தீன், கணிதம், போர்த்துக்கேயம், சங்கீதம், பாட்டு போன்றவைகளும் பிரான்சிஸ்கன், இயேசுசபைகளைச் சேர்ந்த குருக்களால் வழங்கப்பட்டன. மாணவர்கள் தங்கியி ருந்து கற்க விடுதிகள் அமைக்கப்பட்டன. பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் இலவசமாய் பாடம் புகற்றப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்க, ஆசிரியர்களை பயிற்றுவிக்க ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டது. போர்த்துக்கேயரின் காலம் முடிவடைய முன்னரே நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டன. இவ்வாறு போர்த்துக்கேயரைத் தொடர்ந்து 1657ல் ஒல்லாந்தர் வசமாகியது. இங்கு பல்தேயுஸ் பாதிரியார் கல்விப் பணியுடன் தொடர்ந்து மறை பணியினையும் வழங்கினார். இப்பாதிரியார் மக்களுக்கு கற்றுக்கொடுக்க தமிழையும், போர்த்துக்கேய மொழியையும் கற்று பணியாற்றி னார். மறைக்கல்வி கற்பிக்கக்கூடிய சுதேச ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை மறையாசிரியர்களாய் பயிற்று வித்தார். இவர்களின் காலத்தில் கல்வித்துறை மேலும் வளர்ச்சி கண்டது. 1760களில் இலங்கையில் 130 .....

→



# பாட்டி! பாட்டி!!



கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

பாட்டி! பாட்டி!
ஆதாம்! ஏவாள்!

என்னடா டிலான் அது!
விஜய் இல்லாட்டி சூரியா
மறுகா அந்த செவத்த பொட்ட
கீர்த்தி சுரேஷ்
இதுகளத்தானே கதைக்கிற நீ
இப்ப ஆதாம் ஏவாள்
என்னடா புதினமிது!

இல்ல பாட்டி! ஆண்டவர்
ஆதாம் ஏவாள படைச்சதுமே
சாத்தான் பாம்பாக வந்திச்சே....

ஓம்! அதுக்கென்ன!

அந்த பாம்பு சொன்னதால்தானே
அவங்க விலக்கப்பட்ட கனியை
சாப்பிட்டாங்க! பாவஞ் செய்தாங்க.
அந்த இடத்தில் நான்
இருந்திருக்க வேணும்
பாம்ப அடிச்சி தொலைச்சிருப்பன்!

என்னடா கதைக்கிறா!
இண்டைக்கும் அந்த சாத்தான்
உன்னோடதானே கிடக்குது!
என்ன பாட்டி சொல்றீங்க!

அதுதாண்டா பேராண்டி!
உண்ட ஐ போணும் எச் போணும்
சாத்தாண்ட வாரிசுகள்!
புரிஞ்சிதா....?

**மூன்றாம் தவணை**
**எதிர்நோக்கு**
**முன்னோடிப் பரீட்சை – பகுதி – I**
**விடைகள்**

| | |
|---|---|
| 1) 2 | 6) 1 |
| 2) 4 | 7) 2 |
| 3) 1 | 8) 1 |
| 4) 4 | 9) 2 |
| 5) 4 | 10) 1 |
| | 11) 2 |
| | 12) 2 |
| | 13) 1 |



சில்வர் பாத்திரத்தில் குடிநீர் பிடித்து வைத்து ஈரத்துணியை அதன்மேல் சுற்றி வைத்துவிட்டால் தண்ணீர் ஜில் என்று இருக்கும். ■



அடுப்பு மேடையைச் சுத்தம் செய்து முடித்த பின்னர்

அடுப்பு மேடையைச் சுத்தம் செய்து முடித்த சிறிதளவு தேங்காய் எண்ணெயை பனியன் துணியில் விட்டுத் துடைத்தால், மேடை பளபளக்கும். (கிரானைட் மேடைகளுக்கு இவ்வாறு செய்யலாம்).

---

→ பாடசாலைகளும் 65000 மாணவர்களும் இருந்தனர். பின்னர் 1798களில் ஆங்கிலேய அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நடாத்தியது. இக்காலகட்டத்தில் பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகள் எனப்பட்டாலும் அங்கிலிக்கன் பாதிரிமார்களிடமே பாடசாலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதனால் இங்கிலாந்தின் மறுமலர்ச்சி காரணமாய் அமெரிக்கன் மிஷன், சேர்ச் மிஷன், பப்ரிஸ்ற், வெஸ்லியன் போன்ற புரட்டஸ்தாந்து குழுக்கள் இலங்கை வந்து பல பாடசாலைகளைத் திறந்து கல்விப் பணிக்கு பெரும்பங்காற்றின. ஆங்கிலம் கற்கும் தேவை ஏற்பட்டது. இதனால் ஆங்கிலப் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. ஆங்கிலேயர் அரச நிதிகளைப் பெற்று தமது பொறுப்பிலிருந்த பாடசாலைகளையும் மேலும் வலுப்படுத்தினர். இவ்வாறு இலங்கையில் கல்வித்துறை ஆங்கிலேயர் காலத்திலும் பல வளர்ச்சிகளையும் கண்டுள்ளது. – தொடரும்...

# சிலுவைகள்

சிறுவர் பாதுகாப்புக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றுகூடல் மண்டபத்தில் முடிந்து வளவாளர்களை வழியனுப்பிவிட்டு மாணவர்களை வகுப்பறைகளுக்குள் அனுப்பியபடியே பாடங்கள் தொடங்கிவிட்டனவா எனக் கண்காணித்தபடியே அதிபர் நடக்கிறார். நேற்று அதிபர் கூட்டம் முடிவடைய மாலை ஐந்து முப்பத்தைந்தாகி விட்டது. நிலைய வித்துவான்கள் மாறி மாறி வாசித்ததில் கடுப்பேறிப் போன அதிபர் எழும்பி வந்து விட்டார். பாக்கியவதி ரீச்சரின் அபோசன் விடயத்தை விலாவாரியாக பேசிக்கொண்டிருந்த நான்கு ஆசிரியைகள் அவசரமாக சங்கத்தை கலைத்து வகுப்புகளுக்குள் ஓடினார்கள். கடைக்கண் பார்வையை வீசியபடியே நடந்தார் அதிபர். எட்டாமாண்டு வகுப்பறையைத் தாண்டும் போது ஒன்றுகூடல் மண்டப மாடிப் பக்கத்திலிருந்து அவர்கள் வந்தார்கள்.

"சேர் அவன் கரண்ட் வயரப் புடிக்கப்போறானாம் எண்டு ஓடுறான். நான் போய் அதிபரிட்டச் சொல்லுவன் எண்டு பயங்காட்டி கூட்டிற்று வாறன்" என்றான் பவித்திரன்.

பாடசாலையில் அவனது பட்டப்பெயர் படையப்பா. பாடத்தைத் தவிர மற்றய எல்லாமே விரும்பிச்செய்பவன்.

"ஏனாம் பெரியவருக்கு என்ன பிரச்சனையாம்" என்றபடியே அதிபர் ஏறிட்டார். அவன் தலை குனிந்தபடி நிற்கிறான். நாலைந்து மாணவர்கள் கூடிவிட,

"படையப்பா நீ அவனக் கூட்டிற்று என்ர ஒபிசுக்குப் போ நான் அங்க வாறன்.... நீங்கல்லாம் வகுப்புக்குப் போங்க"

அவர் நடந்தார். தன்னுடைய காலைக் கண்காணிப்பில் உட்சுத்தம் வெளிச்சுத்தம் மாணவர் வரவு நிலை கட்டொழுங்கு ஆசிரியர் செயற்பாடுகள் எனப் பலவற்றையும் அவதானித்தபடியே மீண்டுமாகத் தன் அலவலக அறைக்குத் திரும்பினார்.



**பைந்தமிழ்க்குமரன் டேவிட்**

"சேர் இவன்ர கையப்பாருங்க சேர்".

இது படையப்பாவின் குரல். இடது கையை மணிக்கட்டு முதல் முழங்கை வரை உட்புறமாக தாறுமாறாக பிளேட் கீறல்கள். இரத்தக்கசிவு காணப்பட்டது. திகைத்துப்போனார்.

"பாருங்க சேர் நானும் கேட்டன். வாயே திறக்கிறானில்ல அமுசடக்கி" என்றபடியே கவுன்சலிங் ரீச்சர் வரவும்,

"நீங்க போங்க ரீச்சர் நான் பாக்கிறன். படையப்பா நீயும் வகுப்புக்குப் போ. பிரதீப் நீ உள்ள வா" தன் கதிரையில் அமர்ந்தவர் அவனுடைய கையைப் பிடித்துப் பார்த்தார்.

"என்னடா மகனே உன்ர கோலம். ஆரோட கோவம்" அவர் பேசும்போதே அவன் அழுதான். விம்மி விம்மி அழுதான். அணை உடைந்து பாய்வதைப்போல கண்ணீர் பெருகிற்று.

நிமிடங்கள் கழிந்தன.

"எனக்கு... எனக்கு... அப்பா...ல்ல சேர்.



ரெண்டு அக்காமார் இருக்கா... ஒரு தங்கச்சி. நா....நாங்க நாலுபேர்... அ...அம்மா... எங்கள விட்டிட்டு வெளிநாடு போகப்போறாவு... போக வேணாமெண்டு சொல்லி கெஞ்சிப்பாத்தன் அவ... அவ கேக்கிறாவில்ல... நாளைக்கு போயிருவா... அம்மா... அதான் தாங்கேலாம இப்பிடி கைய வெ... வெட்டின" விம்மி வெடித்து அழுகையோடு கூறி முடித்தான். அதிபரின் கைகளில் அவனது கண்ணீர்த் துளிகள் விழுந்து வழிகின்றது. முதுகைத்தடவி அவன் கண்ணீரைத் துடைத்து விட்டபடியே,

"அப்பா எங்க மனே" என்றார்.

"அப்பா அக்சிடென்றில செத்துப்பொயித்தாரு... சேர்..." என்றான். தாய்ப் பாசத்திற்காக தவித்து நிற்கும் அந்த இதயத்திற்கு எப்படி ஆறுதல் கூறுவது? எப்படித் தொடங்குவது எங்கே முடிப்பது வார்த்தைகள் எழவில்லை அவருக்கு...

"எக்ஸ்கியுஸ்மி சேர்" நிமிர்ந்தார். அவன் அவசரமாக கண்களைத் துடைத்தான்.

"என்ன ரீச்சர்" மூன்றாம் தரம் கற்பிக்கும் வசந்தா ரீச்சர் தன் வகுப்பு மாணவியொருத்தியை கையில் பிடித்தவாறு உள்ளிட்டாள்.

"ஆ... பிரதீப்... இப்ப கணித பாடம் நடக்கும். இன்ரவெல் டைம்ல என்னய வந்து பார். இப்ப வகுப்புக்கு போ" என்றார். அவன் சென்று மறைந்தான். சமையலறையில் காய்கறி வெட்டக்கூடிய ஒரு கூரிய கத்தியை ஆசிரியை அதிபரின் மேசையில் வைத்தாள்.

"என்ன ரீச்சர் கத்தி" என்றார் அவர்.

"சேர் இவட பேரு சுபானி. தாயின்ர வயித்தில இரிக்கும்போதே அப்பன்காரன் கையவிட்டுப் பொயித்தானாம்... பிறந்ததில இருந்து தகப்பனத் தின்னி... சனியன் அப்பிடியான வசைகளோடதான் வளந்த பிள்ள. நான் நேத்து ஒவ்வொரு பிள்ளை யின்ர பயோடேட்ரா எழுதினன். இவ மட்டும் அப்பா பேரச் சொல்ல மாட்டன் எண்டு அடம் பிடிச்சா. இண்டைக்கி வரேக்குள்ள கட்டாயமாக அப்பா பேர எழுதிவரவேணுமெண்டு சொல்லி விட்டனான். காலையில கிளாசுக்குள்ள போனப்பதான்,

"ரீச்சர் என்ர அப்பாட பேரக் கேட்டிங்கண்டா இந்தக் கத்தியால கழுத்த வெட்டுவன் எண்டு கத்திய காட்டுறா பாருங்க சேர். முளைச்சி மூணு இல விடல அதுக்குள்ள..."

தொடர்ந்து ஆசிரியை ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவரின் காதில் விழவேயில்லை. அந்தச் சிறுமியை கருணையோடு பார்த்தார். பிஞ்சு முகத்தில் வேதனை விரக்தி நிரம்பிக்கிடந்தது. அவள் கடந்துவந்த நிமிடங்கள் நெருப்பாறாக நகர்ந்திருக்குமோ. இந்தப் பிஞ்சு எப்படித்தான் தாங்கினாளோ? அவர் மனம் கனத்தது. மேசையில் கத்தியிருக்க ஆசிரியை அவளை மீண்டுமாக கூட்டிப்போகின்றாள். அவருக்கு இடதுபுற நெஞ்சில் முள்போல வலி பரவத்தொடங்கியது. ■

## வினா விடைப் போட்டி - இல 12

### சரியான விடைகள்

1. அன்பால் கிடைக்கின்ற மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சி
2. ஒரு கிலோ பாஸ்தா பொட்டலம்
3. 8.2 பிரிவின்படி
4. Giorgio La Pira
5. புத்தர்
6. சூயஸ் வளைகுடாவில் தற்போதுள்ள நவீன நகரத்தின் கடற்கரையில் இருந்து சுமார் 1.5 KM தொலைவில்.
7. முசோலினி
8. 99 சதவீதம்
9. சுவாமி துரியானந்தர்
10. "ஈதர்" என்ற மயக்க மருந்து.

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

■ R. சஞ்சித்,
4/6, காளிகோவில் வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

■ V. மாக்கிறேற்,
இல. 48, உடையார் வீதி,
கல்முனை - 2.

■ திருமதி. பீ.ஐ. கைடிபொன்கலன்,
24/11, 1ம் குறுக்கு,
செல்வநாயகம் வீதி,
மட்டக்களப்பு.

# சிந்தித்தால் மாறலாம்

வருடம் தொடங்கி நான்கு மாதங்கள் முடிவடைந்து விட்டன. இன்னொரு மே தினமும் வந்து விட்டது. நாம் மாறிவிட்டோமா? காலநிலையும் உஷ்ணத்தை அள்ளி வீசியது. இயற்கையை நாம் சீண்டினோம். இப்போது அது எம்மை தண்டிக்கின்றது. இறந்து போன திமிங்கிலம் ஒன்றின் வயிற்றில் இருந்து கிலோ கணக்கில் பிளாஸ்டிக் போத்தல்கள் எடுக்கப் பட்டுள்ளன; இச்சம்பவம் மிக அண்மையில் தெற்காசிய நாடொன்றின் கடலில் இடம்பெற்றது. ஆழ் கடலில் எப்படி பிளாஸ்டிக் போத்தல்கள் வந்தன? ஏதேனும் ஓர் நாடு அல்லது நாடுகள் தங்கள் நாட்டுக் கழிவுகளை கப்பல்களில் கொண்டு சென்று ஆழ்கடலில், இரகசியமாகக் கொட்டுகின்றனவா...?

தமிழ்நாட்டில் பாவித்த பிளாஸ்டிக் போத்தல்களைப் பாவித்து "கார்ப்பெட்" வீதிகள் போடுகின்றார்கள். சில விடயங்களில் அவசரப்பட்டு ஆராயாமல் ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன: வீதி மறியல்கள் நடத்தப்படுகின்றன. தென்னிந்தியாவில் "ஸ்டெரலைட்ஸ்" ஆலைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன: துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் நீதிமன்றம் தொழிற்சாலையை நடத்தலாம் என்று தீர்ப்பளித்துவிட்டது. அதேவேளை தமிழ்நாட்டின் இன்னொரு பகுதியில் "எட்டு வழி அதிவேக நெடுஞ்சாலை" அமைப்பதற்காக விவசாயக் காணிகள் அளக்கப்பட்டன: கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஆனால் நீதிமன்றம் தடைசெய்துவிட்டது.

சிலவகை ஆர்ப்பாட்டங்கள் சரியானவை: சிலவகை ஆர்ப்பாட்டங்கள் நியாயமற்றவை. எல்லாம் எமது மனங்களைப் பொறுத்தவிடயம். அண்மையில் "மைக்ரோசொப்ட்" நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சுந்தர்பிச்சை அவர்கள் ஊடகமொன்றிற்கு பேட்டியளிக்கையில் பின்வருமாறு தன் அனுபவத்தைக் கூறியுள்ளார்.



ஆழியோன்

"நான் படிக்கும்போது சிற்றுண்டிச்சாலையொன்றுக்கு சென்றிருந்தேன். பக்கத்து மேசையில் நான்கு பேர் அமர்ந்திருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது "கரப்பான்பூச்சி" ஒன்று பறந்து வந்து அதில் இருந்த பெண்ணொருவரின் தோளில் அமர்ந்தது. உடனே அப்பெண் பயந்து அலறினாள். "கரப்பான்பூச்சி" பயந்து மற்றொரு பெண்ணின் மேல் சென்று அமர்ந்தது. அப் பெண்ணோ மிகவும் பயங்கரமாகக் கத்தினாள். இதை அவதானித்த பரிசாரகர் அப்பூச்சியை எடுத்து மிகச் சர்வசாதாரணமாக எறிந்துவிட்டார்.




பூச்சியின் நிலையில், தன்மையில் மாற்றம் இல்லை: மனிதர்களின் மனநிலையில் தான் மாற்றம் காணப்படுகின்றது. இதனை அவதானித்த நான் மிகப் பெரிய படிப்பினையைப் பெற்றுக்கொண்டேன்".

எமது மனநிலை மாற்றம் மிகவும் முக்கியமானது. மனமாற்றம் என்பது சில வேளைகளில் ஒரு நொடியிலும் ஏற்படலாம். தற்கொலை செய்ய முயற்சிப்பவன் கூட ஒரு நொடி சிந்திப்பதால் மனமாற்றம் பெறலாம்.

■

# இணைந்த இல்லற வாழ்வின்

## அறுபது ஆண்டுகள் (11.05.1959 - 11.05.2019)

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்;
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்"



இல்லற வாழ்வில்
வைரவிழாக் காணும்
எம் அன்பிற்கினியவர்களை
வாழ்த்தும் வேளையிலே
இறைவன் செய்கின்ற
சகல நன்மைகளுக்கும்
உளமார்ந்த நன்றிகள்!

**திரு. திருமதி. கவுரியல் றோசலின்**
தம்பதியினர்
(ஓய்வுநிலை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை கணக்காளர்)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள்.

4B, டயஸ் ஒழுங்கை,
மட்டக்களப்பு.
தொ.பே: 0774162664



அருட்சகோதரி
லூர்ட்ஸ் FMM

1955ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் வைகாசித் திங்கள் 1ம் திகதியைப் புனித வளனாரைத் தொழிலாளரின் தோழனாகப் பிரகடனம் செய்தார். இத்தினத்தைத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடி மகிழும்படி வேண்டுகோள் விடுத்தார். அன்று முதல் ஆண்டு தோறும் இந்நாளில் அகிலமெங்கும் விழா எடுக்கின்றனர் புனித வளனாருக்கு.

# தொழிலாளர்களின் தோழர்

புனித வளனார் தாழ்ச்சியின் தனயன்: இறை இயேசுவின் வளர்ப்புத் தந்தை: பொறுமையின் பொற்சிலை: மீட்புத் திட்டத்தின் பங்காளி: நீதிமான். அன்னை மரியாளின் அன்புக் கணவர்: அண்டிவந்தோரை ஆதரிக்கும் அரிய தந்தை. தன்னலம் துறந்த புனித வளனார் துன்புற்றோரைத் தேற்றுகிறவர். புனிதரின் பிறப்பிடத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் பலவாறு கூறியபோதும் அதிகமான அறிவாளிகள் அவரின் பிறப்பிடம் பெத்லகேம் என எடுத்துரைத்துள்ளனர். இவர் தாவீது வம்சத்தைச் சேர்ந்தவர். புனித வளனாருக்குப் 12 வயதாகியதும் ஜெருசலேமில் தொழில் பயிற்சிக்குச் சென்றார். இவர் தங்கம், வெள்ளி, இரும்பு, கல், மரம் இவற்றுடன் தொடர்புள்ள பல தொழில்களில் தேர்ச்சி பெற்றிருந்தார் என அறிகிறோம்.

இன, மத, பேதமின்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட புனித வளனார் ஓர் புண்ணிய சீலன். புதுமைகள் பல புரிபவர். அண்டினோரை ஆதரித்து, ஆறுதலளித்து அவர்களின் துயர் துடைப்பவர். தொழிலாளரை அன்பு செய்யும் அற்புத அன்பர். எனவே, நாமும் இப்புனிதரை நாடி அவரின் அடைக்கலம் பெறுவோம். அவர் புகழ் பரவ ஆவன செய்வோம். ■

---

"உண்மையான மகிழ்ச்சி நாம் எவ்வளவு பொருள் ஈட்டுகிறோம் என்பதில் இல்லை. அந்தப் பொருளில் எவ்வளவு தர்மம் செய்கிறோம் என்பதில்தான் இருக்கிறது.

- ரவீந்திரநாத் தாகூர்





தென்னம்பூவை மென்று தின்று வந்தால், அடிபட்டதால் ஏற்பட்ட உள் காயங்கள் குறையும்.

## தென்னம் பூ

பால்வினை நோய், வெள்ளைப்படுதல், உடலில் உள்ள சூடு, இரத்தப் போக்கு, விஷக்கடி நோய்கள் நீங்கும்.



## மந்தார்ப்பூ

Bauhinia Purpurea

உடல் கொதிப்பு நீங்கும். கண்களும், உடலும் குளிர்ச் சியடையும். தைரோயிட் சுரப்புக் குறைபாட்டை தடுக்க மாத்திரையாகத் தயாரித்து கொடுக்கப்படுகிறது.

## முள்முருக்கம் பூ

Variegata - Indian Tiger Claw





மாதவிலக்குத் தடை நீங்கும்

# குழந்தைகள் மட்டும் வாங்க.... கதை கேட்போம்!

**முயல், ஆமை கதையின் புதிய வடிவமைப்பு:**

**1.** முயலும் ஆமையும் ஓட்டப் பந்தயம் வைக்கின்றன. முயல் வேகமாக ஓடினாலும், வழியில் தூங்கி விட, ஆமை மெதுவாகச் சென்றாலும் தூங்கும் முயலைத் தாண்டிச் சென்று பந்தயத் தில் ஜெயித்து விடுகிறது.

நீதி – 1 : **தலைக்கனம் கூடாது. வேகத்தை விட, நிதானம் முக்கியம் ஜெயிக்க! வெயிட்... இனிதான் கதையே ஆரம்பம்!**



**2.** தோல்வியை நினைத்து மனவேதனை அடைந்த முயல், "நாம ஓவர் கான்ஃபிடன்ட்டா இருந்ததாலதான் தோத்துட் டோம்" என்பதைப் புரிந்து கொண்டு, மீண்டும் ஆமையைப் பந்தயத்திற்கு அழைக்கிறது. ஆமை யும் ஒப்புக்கொள்ள, பந்தயம் ஆரம்பிக்கிறது. முயல், இடையில் எங்கேயும் தூங்காமல் ஓடிச் சென்று, ஜெயிக்கிறது.

நீதி 2 : **நிதானம் முக்கியம் தான், ஆனால் வேகம் அதை விட சிறப்பானது! கதை முடிந்துவிட்டது என்று நினைத்தால்... அதுதான் இல்லை!**

**3.** காலங்காலமாக ஜெயித்து வந்த ஆமையால் இந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியவில்லை. இம்முறை அது முயலை பந்தயத்துக்கு அழைக்கிறது. இங்குதான் ஒரு ட்விஸ்ட்! பந்தயம் வழக்கமான பாதையில் இல்லை என்று ஆமை சொல்ல, முயலும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறது ...

ஒன்... டூ... த்ரீ...

முயல் இடையில் எங்கேயும் இளைப்பாறாமல் ஓட, ஆமை மெதுவாகச் சென்றது. முயல் ஒரு இடத்தில் சடன் பிரேக் போட் டாற்போல நிற்கிறது பார்த்தால் அங்கே ஒரு ஆறு! அதைக் கடந்தால் தான் பந்தய இலக்கை அடைய முடியும். ஆற அமர வந்து சேர்ந்த ஆமை அசால்ட்டாக ஆற்றை நீந்தி கோட்டைத் தொட்டு பந்தயத்தில் ஜெயிக்கி றது!

நீதி 3 : **நாம் போட்டியிடும் போது எதிரியின் பலம் அறிந்து, ஆடுகளத்தை நம் பலத்துக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள வேண்டும்.**

இன்னும் கதை முடியவில்லை

**4.** பிள்ளைகளே..! ஒரு வழியாக ஆமையும் முயலும் நண்பர்கள் ஆகி, இருவரும் சேர்ந்து பேசி, ஒரு பந்தயம் வைக்க முடிவு செய்கிறார்கள். ஆமை ட்விஸ்ட் வைத்த அதே பாதையில்தான் இம்முறையும் பந்தயம். முயல் வேகமாக ஓட, ஆமை மெதுவாக நகர்கிறது... ஆற்றின் கரை வரை. அதற்குப் பின்.......?

ஆமை ஆற்றில் நீந்துகிறது. அப்படியென்றால் முயல்? ஆமையின் முதுகில். கரை சேர்ந்ததும், மீதம் உள்ள தூரத்தை, ஆமையை தன் முதுகில் வைத்தவாறு முயல் ஓடிக் கடக்கிறது. இருவ ரும் ஒரே நேரத்தில் பந்தயக் கோட்டை அடைகிறார்கள் இருவரும் வெல்கிறார்கள்!

நீதி 4 : டீம் வேர்க் வின்ஸ்!

கணிதத்தில் 1+1 = 2. ஆனால் வாழ்வில், 1+1 = 3. அதாவது, இருவரின் பலம் சேரும்போது, அது ஒரு புது பலத்தை உருவாக்கும். அதனால்தான் நிறுவனங்களில் பணியாட்களைத் தேர்வு செய்யும்போது, அவர்களின் டீம் வேர்க் திறனை முக்கியமாகச் சோதிக்கிறார்கள். அலுவலக வேலைகளுக்கு மட்டும் இல்லை, வீடுகளிலும் டீம் லிவிங் (Team Living) இருந்தால்தான், ஒரு குடும்பம் சிறப்பாகச் செயல்படும். குடும்பத்தில எல்லோரின் பங்களிப்பும் தேவை. எனவே, டீம் வேர்க் வளர்ச்சிக்கு மட்டும் இல்லை, வாழ்வதற்கும் மிக முக்கியம்.

இந்த லேட்டஸ்ட் முயல், ஆமை கதையில் வரும் எல்லா கருத்துக்களுமே ஜெயிக்க முக்கியமானவை. நிதானம் முக்கியம், வேகம் முக்கியம், புதுப்புது வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியது முக்கியம், இந்தக் கதை இறுதியாக உணர்த்தும் 'யூ வின், ஐ வின்!' (You Win! I Win! Approach) அணுகுமுறை முக்கியமாகும். அதை கற்றுக் கொடுப்பது டீம் வேர்க்கே!

வாழ்க்கையில்
முயலும் ஜெயிக்கும்,
ஆமையும் ஜெயிக்கும்.
முயலாமை மட்டுமே ஜெயிக்காது.

முயன்று தோற்றால் - அனுபவம்
முயலாமல் தோற்றால் - அவமானம்.
வெற்றி நிலையல்ல,
தோல்வி முடிவல்ல..
முயற்சியை பொறுத்து தான் வெற்றி, தோல்வி..!!

■ நமக்கு பகிர்ந்தவர்:
குருமூர்த்தி, அரியலூர்□இளையதலைமுறை

## விடை தெரியா வினாக்கள்!

சித்திரைப் புத்தாண்டு விடுமுறைக்கு அன்ரனின் உறவினர்கள் வந்திருந்தனர்.

அவர்கள் இந்துக்கள். அவர்களின் பிள்ளையான மூன்று வயதுச் சிறுமி அன்ரனிடம் வந்து கேட்டாள்:

"மாமோய், ஓராள 'வா' எண்டு கூப்பிடுற சரியா? 'வாங்க' எண்டு கூப்பிடுற சரியா ...."

"வாங்க எண்டு கூப்பிடுறதான் சரி மகளே...."

"அப்படியெண்டா நீங்க வளர்க்கிற கோழியெல்லாம் 'வா... வா...' எண்டுதானே கூப்பிடுறீங்க ..... அது பிழதானே ...." என்றாள்.

அன்ரனுக்கு எப்பிடி பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

திரும்பவும் சொன்னாள்:

"புது வருசத்திற்கு ஒரு கோழிக்கும் ஏன் உடுப்பெடுக்கல்ல.... பாவமெல்லா....!"

அன்ரன் குழம்பிப் போனார்.



கடுகுக் கதை - 98

இந்த வயசில இப்பிள்ளைக்கு எப்பிடிப் புத்திசாலித்தனம். அவள் வளர்கின்ற பட்டணத்தில் 'புரோய்லர்' கோழி இறைச்சியைத் தான் அவள் கண்டிருப்பாள். உயிருள்ள கோழியை இங்குதான் காண்கிறாள்.


சின்னன்களை சரியாகவும், கவனமாகவும் வழிநடத்த வேண்டும்....." என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டார்.

- பற்றி

*21.04.2019*

ஞாயிற்றுக்கிழமை உலக வாழ் கிறித்தவர்களின் புனித நாளாகிய இயேசுகிறித்துவின் உயிர்ப்புப் பெருவிழா நாளில் (ஈஸ்டர் தினத்தில்) இலங்கை நாடானது தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியது.

இக்கொடூர குண்டுத் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களை நேரடி யாகப் பார்த்தவன் என்கின்ற கோதாவில்





கின்றேன். அச்சம்பத்தில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாடுகளிலிருந்து சென்று அங்கு குடியேறியவர்களாகும். ஆயினும் அதனைக் கேட்ட சிலர் அதற்கு ஏன் இலங்கை யைத் தெரிவு செய்ய வேண்டும்? அங்கேயே அல்லது வேறு ஐரோப்பிய நாடுகளிலோ அல்லது அமெரிக்காவிலோ கொன்றிருக்கலாமே?

# மத அடிப்படைவாதத்தின் மற்றுமொரு கோரமுகம்

இலங்கையராகிய எமக்கும் அதிலும் குறிப்பாக கிறித்தவர்களாகிய எனக்கும், என்னைச் சார்ந்த சகோதர சகோதரிகளுக்கும் விடுக்கின்ற செய்தி யாதென்று எனக்குள் நான் தியானித்த வேளையில் தோன்றிய சில கருத்தோட்டங்களை முழு இலங்கையரோடும் பகிரலாமென எண்ணுகின்றேன்.

இச்சம்பவம் நடந்தேறியவுடன் நான் என் சக நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டது யாதெனில் கடந்த 15.03.2019 வெள்ளிக்கிழமை நாளில் நியூ ஸீலாந்து நாட்டின் கிரைஸ்ட்சேர்ச் (Christchurch) நகரில் ஜும்மா தொழுகைக்காக கூடியிருந்த 49 இசுலாமியரை சுட்டுக்கொன்றும் மேலும் பலரைக் காயப்படுத்திய சம்பவத்திற்குப் பதிலடியாகவே நிகழ்த்தப்பட்டுள்ளதென்று ஊகிக்



அருட்பணி **அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

எமது நாடு இப்போதுதான் யுத்த அழிவுகளிலிருந்து மீண்டுகொண்டு வருகின்றது. அதற்குள் இப்படியொரு அழிவு அதுவும் இப்புனிதமான ஈஸ்டர் நாளில் தேவையா? என்கின்ற கேள்விகளும் எழாமலில்லை. அவர்களுக்கு எல்லாம் எனது ஒரே பதில் எங்கள் நாட்டிலில்லாமல் வேறு எந்த நாட்டிலாவது நடந்தால் பரவாயில்லை போலுள்ளது உங்களது பேச்சும், செயலும். இங்கு இழக்கப்பட்டால் உயிர்கள் அங்கு இழக்கப் பட்டால் வெறும் பிணங்களா? உதாரணமாக, இச்சம்பவம் கனடா அல்லது இங்கிலாந்து நாட்டில் நடைபெற்றிருந்தால் நிச்சயமாக அவ் விறப்புக்களில் யாராவது ஒன்றுக்கு மேற் பட்ட இலங்கைத் தமிழர் இருப்பார் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்தளவிற்கு இலங்கைத் தமிழரின் பிரசன்னம் அந்த நாடுகளி லுள்ளது. அதுவே உங்கள் உறவுகளாக (சகோதரர், சகோ

தரிகள், மாமா, மாமி, இப்படி இன்னும் பல) இருந்தால் என்ன சொல்வீர்கள். எனவே இத் தகைய கொடூர இறப்புக்கள், அப்பாவிகளின் மரணங்கள் எங்கு நிகழ்ந்தாலும், யாருக்கு நிகழ்ந்தாலும் பக்கச்சார்பின்றி மனிதம் வாழ உரத்துக் குரல் கொடுப்போம். அதுவே உண்மை யான மனிதமாகும், கிறித்தவமுமாகும்.

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கிறித்தவர்கள் என்பது வெளிப்படையான உண்மை. தங்களது அம்மா, அப்பா, பிள்ளைகள், உறவுகள், சொந் தங்கள், நட்புக்களென பலரையும் இழந்து நாதியற்று நிற்கின்ற வேளைதனில், இதனைச் செய்த கயவர்களைக் குறித்து கோபமும், பழிதீர்க்கின்ற மனநிலை மேலோங்கி நிற்கு மென்பது சொல்லாமலே புரிந்துவிடும். இச்சம்பவத்துடன் இசுலாமிய தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய அமைப்புக் கள் மீது கண்டனக்குரல்கள் வலுக்கின்றன. இலங்கைத் தீவில் இசுலாமியரை வெறுப்பு டன் நோக்குகின்ற தன்மையும் அதிகரித்து வருகின்ற சூழலலையும் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய முரண்பட்ட தருணத் தில் இலங்கை கத்தோலிக்க திருஅவை, குறிப்பாக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை நடந்துகொண்ட விதம், கத்தோலிக்க நம்பிக்கையாளர்களை அவர்களின் இறுக்கமான தருணத்தில் நெறிப்படுத்திய பாங்கு உலகத்தின் பார்வையினை பெற்றுக்கொண்டுள்ளது. இன்று அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைவர்களால் பெரிதும் போற்றப்படுகின்றவராக மாறியுள்ளார். பேராயரைக் குறித்து அண்மையில் வெளியிடப் பட்ட கருத்துக்களில் அல்-குரானை மேற்கோள் காட்டி ஓர் இசுலாமியரின் பதிவு: '... பதற்றத்தில் நாடே துடித்துக்கொண்டிருந்தது. எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்க ஒரு பகுதி வெறியுடன் ஆவலாய்க் காத்திருந்தார்கள். ஒரு சமூகத்தை துவம்சம் செய்யவும் சிலர் நினைத்திருந்தார்கள்... பேராயர் அமைதியாய் சொன்னார். "எவருக்கும் எவரும் கைநீட்ட வேண்டாம். சம்பவத்தை வைத்து எந்த இனத் திற்கோ, மதத்திற்கோ எதிராக செயற்படவும் வேண்டாம் இறைவன் நமக்குத் துணை" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்...'

'நிச்சயமாக நாங்கள் கிறித்தவர்களாக இருக்கின்றோம்' என்று சொல்பவர்களை, மு.:. மின்களுக்கு நேசத்தால் மிகவும் நெருங்கி யவர்களாக (நபியே) நீர் காண்பீர். ஏனென்றால் அவர்களில் கற்றறிந்த குருமார்களும், துறவிகளும் இருக்கின்றனர். மேலும் அவர்கள் இறுமாப்புக் கொள்வதுமில்லை' (அல்-குரான் 5:28). தலை மைத்துவத்திற்கு இதனைத் தவிர வேறு என்ன உதாரணம் இருக்க முடியும். அதிகாரமும், செல்வமும், சந்தர்ப்பமும் இருந்தும் மன்னிப்பும், அன்பும்தான் வாழ்க்கை என்பதை நடைமுறையில் காட்டித்தந்த நீங்கள் இயேசுநாதரின் மெய்யான வாரிசுகள்."

இன்னுமொரு அழகான பதிவு: "Our Respect and Gratitude to Rev. Cardinal Malcom Ranjith this mosque is open for your MASS" (எங்கள் மரியாதையும், நன்றியும் பேரருட்திரு கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கட்கு, இந்த பள்ளிவாயில் உங்கள் திருப்பலிக்காக திறந்துள்ளது). இப்படிப் பல பதிவுகள்.

நெருக்கடி வேளைகளில் இயேசுவின் சாட்சி களென வாழ்வினில் காட்ட வேண்டியதுதான் கிறித்தவர்களுக்கு உயிர்த்த கிறித்துவின் அழைப் பாகும். இந் நாட்களில் ஆலயங்களில் திருப்பலி இல்லையேயெனக் கவலைப்படுவதை விடுத்து நல் கிறித்தவ வாழ்வினால் ஆலயமாவோம். 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' எனும் பழிவாங்கும் போக்கல்ல இன்றைய தேவை. மாறாக 'தீமை செய்வோரை எதிர்க்காமலும், பகைவரை வெறுக்காமல் அன்புகூரவும், துன்புறுத்து வோருக்காக இறைவேண்டல் செய்யவும்' அழைக்கப்படுகின்றோம். அதுதான் உண்மையான கிறித்துவை பின்பற்றும் கிறித்தவ மாகும். "சமாதானத்தை மீளவும் கொண்டுவர ஆயுதங்களும், குண்டுகளும் தேவையில்லை மாறாக அன்பும், இரக்கமுமே தேவையாகும்" என்கிறார் அன்னை தெரேசா. இன்றைய கால கட்டத்தின் தேவை மதவாதிகள் அல்ல மாறாக நல்ல ஆன்மீகவாதிகளே. நல் ஆன்மீகத்தில் ஊறி அனைவரையும் அரவணைப்போம்.

**மற்றுமோர்**
**சிந்தனையுடன்**
தொடரும் ...

# ஜெபமாலை ஜெபித்திடுவீரே





வணக்க மாதமென்றாலே வைகாசி மாதமே
மணக்க பல மணம் தரும் வசந்த காலமே
இணக்கம் பல தந்திட விரைந்திடும் காலமே
பிணக்குகள் பல தீர்த்திடும் செபிக்கும் காலமே
குணம்பல தந்திடுமே குவலயத்தில் இதுதானே
உணவாகச் சுவைத்திட செபித்திடும் காலமிதே
சுணக்கமின்றி ஐம்பத்து மூன்று மணிகளை செபித்துடுவீரே!

தேவமாதாவின் புதுமைதனைப் போற்றிடவே
ஆவலோடு அன்றாடக் கடமையாகவே – அனைவரும்
பாவவாழ்விற்கு பரிகாரங்கள் பெற்றிடவே – பூவொடு
தூப, தீப ஆராதனையாக பக்தி மணம் கமழவே
ஆபத்துகள் நம்மை அன்றாடம் அணுகிடாமலே
கோப, தாபங்களை முற்றிலும் களைந்திட்டே
நாவாலே நன்றிகள் பல கூறியே செபித்திடுவீரே!

தன்னையே உலகிற்கு தந்த பரமனின்
அன்னைக்கு இதுவொரு அன்பு புகழ்மாலை
இன்றைக்கு இதுவொரு அற்புதமான மாலை
என்றென்றைக்கும் நம்மைக் காத்திடும் இனிய மாலை – பல
கன்னியரின் வாழ்வையே காத்திடுமேயிந்த மாலை
பொன்னிலும் பெறுமதியான புனித மாலையை செபித்திடுவீரே!

பீ. ஐ. கைடி பொன்கலன்



# கல்லை அகற்றுவதுதான் உயிர்ப்பு விழா ....

* பிரச்சினைகள் என்ற அலைகள் நம்மை அடித்துச்சென்று, விரக்தி, அச்சம் என்ற பாறைகளில் மோதாமல் இருக்க அருளை வேண்டுவோம்.

** நறுமணப் பொருள்களை ஏந்தி, கல்லறைக்குச் சென்ற பெண்கள், கல்லறையை மூடியிருந்த கல்லைப்பற்றி எண்ணியபடியே சென்றனர்.

*** கல்லறைக் கல்லை, பாறைகளை அகற்றுவதுதான் உயிர்ப்பு விழா. நமது நம்பிக்கை எதிர்பார்ப்பு ஆகியவற்றை சிதறடிக்கும் கடினமான பாறைகளையும் இறைவன் அகற்றுகிறார்.

**** உயிர்ப்புச் செய்தியைக் கேட்ட பெண்கள், கல்லறையைவிட்டு அகன்று சென்றனர். நம்பிக்கை கொண்டோர், கல்லறைகளுக்கருகில் நின்றுவிடக்கூடாது என்பதை, உயிர்ப்புப் பெருவிழா சொல்லித் தருகிறது.

# நினைத்தால் பயம் வருகிறது

தொடங்கிவிட்டது வெயிலின் அகோரம். சூரியனின் சூழ்ச்சியால் எல்லாமே சுட்டெரிக் கப்படுகிறது. எல்லோராலும் பேசப்படுகின்ற ஒரு அவலம் "என்ன வெயில்டா சாமி!' வெப்பத்தை தணிக்க பல வழிகளை கையாண்டும் தோல்வி கண்டவர்கள் தங்களது பார்வையை பழங்கள் பக்கம் திருப்புகிறார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆசையுடன் வாங்குவது 'தர்பூசணி' (Watermelon) எனப்படும் வர்த்தகப் பழம் அத்தோடு இந்த பழத்தின் வரவும் அதிகரித்திருக்கிறது.

இப்போது நாட்டு பழங்களைவிட "ஹைபிரிட்" பழ வகை அதிகளவில் கண்களைக் கவர்கின்றது. ஒரு சில விற்பனையாளர்கள் எம்மைக் கவர்ந்திட நாட்டுப் பழங்களில் "பீட்டா எரித்ரோசின்" என்ற இரசாயனத்தை ஊசியால் உள்ளே செலுத்தி அதன் நிறத்தைச் செக்க சிவந்த நிறத்திற்கு மாற்றி விடுகிறார்கள். விளைவு தெரியாமல் நாங்களும் வாங்கி விடுகிறோம். உண்மையில் இந்த இராசாயனம் கலந்த பழங்களைச் சாப்பிடுவதால் புற்றுநோய், கல்லீரல் பாதிப்பு என பல நோய்கள் நம்மைத் தாங்குகிறது என மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இதனால் உங்கள் விருப்பமான பழத்தை நினைத்தால் பயம் வருகிறதா?
உங்களுக்குக் கவலை வேண்டாம்...!


பாருங்கள் ..... கொஞ்சம் கவனமாகப் பார்த்து வாங்குங்கள் ...

கடைப் பையனுக்கு முதலாளியைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கூட்டம் வழக்கம்போல நிரம்பி வழிந்தது. ஒரு இளம் தம்பதி டி.வி.டி பிளேயர் வாங்கினர். உடனே முதலாளி முருகேசன் அவனிடம், "டி.வி.டி யை அவங்க கார்ல வச்சுட்டு வா..." என்றார்.

இப்படித்தான் யார் எதை வாங்கினாலும், 'கார்ல வச்சுட்டு வந்திரு' என்று சகட்டுமேனிக்குச் சொல்வார். இது அவனுக்குக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன விஷயம். அவருக்கோ சொல்வதில் சலிப்பு வந்ததே இல்லை.

"வேண்டாங்க, நாங்களே எடுத்துட்டுப் போயிடுறோம்..." என்றபடி அதைக் கையில் தூக்கிக் கொண்டு நழுவினார்கள் அவர்கள்.

வாடிக்கையாளர் சென்றதும் முதலாளியைப் பார்த்துக் கேட்டே விட்டான்.




நன்றி : இணையம்

"அவங்க மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கியதை நாம் மாடியில் இருந்து பார்த்தோம். அப்படியிருந்தும் அவர்கள் காரில் வந்ததாகப் பாவித்து .... ஏன் அப்பிடிச் சொல்ல வேண்டும்....?"

"இதோ பாரப்பா... இப்படிச் சொல்லும்போது, 'நம்மளப் பார்த்தா இவங்களுக்கு கார்ல வர்ற மாதிரி தோணுது' என்று அவர்கள் உணர்வார்கள். அதனால் எவ்வளவு சந்தோஷப் படுவார்கள் தெரியுமா? வாடிக்கையாளருடைய சந்தோஷம் தான் நமக்கு முக்கியம்..." என்றார் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல்.

அடிமட்டத்திலிருந்து முதலாளி இந்த அளவுக்கு உயர்ந்திருக்கும் இரகசியம் இப்போது அவனுக்குப் புரிய ஆரம்பித்தது! உயர்வாகப் பேசி மற்றவரகளை மனதார வாழ்த்துவோம்!

**இறை அருளினாலும் தூய அப்போஸ்தலிக்க**
**ஆட்சிப் பீடத்தின் அருளினாலும்,**
**மட்டக்களப்பு மறைமாநில**
**ஆயர் ஜோசப் பொன்னையா ஆகிய நாம்**
**நம் மறைமாநிலத்திலுள்ள**
**சகல குருக்கள், துறவியர், இறைமக்கள்**
**அனைவருக்கும் இறைவனின் அருளும் ஆசீரும்**
**விரும்பி எழுதும்**

## விசேட மடல்

22.04.2019

**இறையேசுவுக்குள் பிரியமான இறைமக்களே!**

தற்போது நாட்டில் நிலவிக்கொண்டிருக்கும் அசாதாரண நிலையை முன்னிட்டு உங்களோடு சில விடயங்களைக் கூற விரும்புகின்றேன்.

முதலில் உயிர்த்த இயேசுவின் வாழ்த்துக்களைக் கூறி இறையாசீரும், இறை பாதுகாப்பும், பராமரிப்பும் உங்களுக்கு கிடைக்கும் படியாக ஜெபிக்கின்றேன்.

மேலும் உயிர்ப்புப் பெருவிழாவன்று நமது நாட்டில் குறிப்பாக கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் எமது மறைமாவட்டத்திலுள்ள சீயோன் தேவாலயமும் குண்டுத் தாக்குதல்களுக்குள்ளாகி பல உயிர்களை, உடைமைகளை இழந்து நிற்பதோடல்லாமல் நாடே ஒருவித பதற்றம் நிறைந்த சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த கொடூரத் தாக்குதலினால் இறந்த ஒவ்வொரு ஆன்மாவுக்கும் இறைவன் நித்திய இளைப்பாற்றியை அளிப்பாராக. உயிர்களை இழந்து துன்பப்படுவோருக்கு இறைவன் ஆறுதல் அளிப்பாராக. நம் அனைவருக்கும் இறைவன் துணை புரிவாராக.

**என் அன்பார்ந்த இறைமக்களே!**

இச் சம்பவங்கள் நம்மை துன்பத்திலும், துயர வேதனையிலும் ஆழ்த்தியிருக்கின்றது. அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தி நம்மிடையே பீதியையும், பயங்கரத்தையும் உண்டுபண்ணியிருக்கின்றது. மன அழுத்தத்தை, அதிர்ச்சியை தந்திருக்கின்றது. ஆலயத்திற்குச் செல்லும் சுதந்திரத்தை, ஒன்றுகூடி நிகழ்வுகளை நடத்தும் சந்தர்ப்பங்களை பாதித்திருக்கின்றது. இன்னும் சில விடயங்களில் பின்னடைவையும், பாதிப்புக்களையும் ஏற்படுத்தி ஒட்டுமொத்த முழு இலங்கையையுமே இவற்றிற்கு தள்ளியிருக்கின்றது.

எனவே இப்படிப்பட்ட வேளையில் சில விடயங்களை சிந்தித்து கடைப்பிடிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. முதலில் கிறிஸ்தவ மனப்பான்மையோடு இச்சூழ்நிலையைக் கையாளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதாவது பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடித்து வன்முறைக்குத் தூண்டும் காரியங்களில் ஈடுபடாமலும், எவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதைத் தவிர்த்து, எவரையும் தூண்டாமலும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இப்படி கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் ஏனையவர்களுக்கும் அமைதியைக் கொடுத்து பாதுகாப்பையும் கொடுக்கலாம்.
2. ஒன்றாக கூடி வருகின்ற சந்தர்ப்பங்களை தவிர்த்து பங்குத்தந்தையின் ஆலோசனைப்படி ஆன்மீகக் காரியங்களை ஆடம்பரம் இல்லாமலும், அதிக நேரத்திற்கு எடுக்காமலும், அதிக மக்களை ஒன்று கூட்டாமலும் இருக்க முயற்சி செய்யுங்கள்.
3. பங்குத்தந்தையோடு ஒரு விழிப்புணர்வுக் குழுவை உருவாக்கி ஆலயத்திற்குள் வருவோரைக் கவனிக்கலாம்.
4. குண்டுத் தாக்குதல்களில் இறந்தவர்களுக்காக ஜெபிக்கலாம்.
5. குண்டுத் தாக்குதலில் இறந்த, பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்திக்கலாம்.

6. குண்டுத் தாக்குதலில் இறந்த குடும்பங்களுக்கு, பாதிப்புற்ற குடும்பங்களுக்கு பங்கு ரீதியாக பொருளாதார உதவி செய்யலாம்.

7. சமூக வலையமைப்பு கருவிகளை, தொடர்புசாதனங்களை மிகவும் பொறுப்புணர்ச்சியோடும் யாரையும், சமூகத்தையும் பாதிக்காதவாறு கையாள வேண்டும்.

8. இந்த அசாதாரண சூழ்நிலையில் அரச சட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கைப் பேண உதவுதல்.

வன்முறைக்குத் தீர்வு வன்முறையாகாது. எமது நாடு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போர், இயற்கை அனர்த்தம், போருக்குப் பின்னரான சவால்கள், பிரச்சினைகளை சந்தித்த அனுபவம் உண்டு. ஏற்கனவே அதிகம் ஈடுசெய்ய முடியாதவைகளை இழந்திருக்கின்றோம். எனவே ஒருவர் அல்லது ஒரு குழுவின் செயற்பாடானது வன்முறைக்கு, அமைதிக்கு எதிராக, பிரச்சினைகளுக்கு, கலவரங்களுக்கு வித்திட்டால் அது பலரையும் பாதித்து எதிர்காலத்தையும் பாதிக்கும். யாரையும் சந்தேகத்துடன் அணுகி பிரச்சினையில் ஈடுபடமால் இருக்கவேண்டும்.

இந்த இறுக்கமான நேரத்தில் மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்து ஒரே இலங்கையராக ஒற்றுமையாக வாழ அழைக்கின்றோம். அதிகாரபூர்வமற்ற தகவல்களை, வதந்திகளைப் பரப்புவதை தவிர்த்துக்கொண்டு தீய சக்திகளை வெற்றிகொள்ள ஒன்றிணைந்து செயற்பட அழைக்கின்றேன்.

இறையேசுவிடம் அனைத்தையும், அனைவரையும் ஒப்புக்கொடுப்போம். அவரையே நம்பியிருக்கின்றோம். அவரே வழிநடத்துவார் என்ற நம்பிக்கையில் வாழ்வோம்.

"அமைதி, சமாதானம், ஒற்றுமை மலர கரம் கொடுப்போம்"

கிறிஸ்துவில் உங்கள் மேல் என்றும் பற்றுள்ள

.......................................................

பேரருட்திரு. ஜோசப் பொன்னையா
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

Rt. Rev. Dr. Joseph Ponniah
Bishop of Batticaloa

குறிப்பு :

➡ இறை இரக்கத் திருவிழா - (ஏப்ரல் 28)
பெரிய புல்லுமலை ஆலயத் திருவிழா – (மே 5)
நாட்டில் நிலவுகின்ற இக்கட்டான சூழ்நிலை காரணமாக மேற்படி திருத்தலத் திருவிழாக்கள் பிற்போடப்பட்டுள்ளன. திருவிழாவிற்குரிய திகதிகள் அறிவிக்கப்படும்.

➡ ஏனைய ஆலயத் திருவிழாக்களை நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# கிறிஸ்தவர்களைத் தாக்கிய உங்களுக்கு

## அழகான வரிகள் ...

- நீங்கள் எங்கள் ஆலயங்களில் நடைபெற்ற திருப்பலியின் நேரங்களைக் கண்டுகொள்வதற்காக நீங்கள் முயற்சி செய்ததைப் பாராட்டுகிறேன்.
- ஞாயிற்றுக்கிழமை நாங்கள் சபை பிராத்தனைக்காகவும், திருப்பலிக்காகவும் ஆலயங்களுக்குச் செல்வதற்கான நாட்கள் என்று எங்கள் மதத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்பதற்காக நான் உங்களை பாராட்டுகிறேன்.
- ஆனால் சில விடயங்களை துரதிஷ்டவசமாக நீங்கள் கற்றுக்கொள்ள முடியவில்லை என நான் நினைக்கின்றேன்.
- நீங்கள் செய்த காரியங்கள் இறந்த எங்கள் மக்களை வேத சாட்சிகளாக மாற்றியுள்ளது என்பது உங்களுக்குத் தெரியவில்லை.
- உங்களுடைய செயல்களால் எங்கள் சகோதர சகோதரிகளை எங்கள் தேவனின் கண்களின் முன்னால் உயர்த்தியுள்ளீர்கள். இதனால் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் மிகவும் நீதியும், பக்தியுமானவர்களாக வளர்க்கப்படுகின்றோம்.
- நீங்கள் செய்ததைச் செய்தபோதும், நீங்கள் தேர்ந்தெடுத்த நேரத்தில், நீங்கள் தேர்தெடுத்த இடத்திலும் அவர்கள் உதடுகளில் இருந்து தப்பித்துக்கொண்ட கடைசி வார்த்தைகள் இயேசுவின் நினைவு மற்றும் பாராட்டும் வார்த்தைகளாக இருந்திருக்களாம். இது ஒரு புனிதமான முடிவு. இது பல கிறிஸ்தவர்களின் கனவு.
- நீங்கள் செய்த செயல் இறந்த கிறிஸ்தவர்களின் பரலோக வாழ்க்கைக்கு ஒரு உறுதி என்பது உங்களுக்குத் தெரியாது.
- கிறிஸ்தவர்கள், அனைவரையும் அன்போடு வரவேற்பவர்கள் என்பதை உங்கள் செயல் உலகத்திற்குக் காட்டியது என்று உங்களைப் பாராட்டுகிறேன். எங்களுடைய இரண்டாவது வீடாகிய எங்கள் ஆலயங்களில் உங்களைப்போன்ற கல் நெஞ்சம் கொண்டவர்களையும் திறந்த மனதுடனும், திறந்த கரங்களுடனும் வரவேற்கின்றோம் என்று உலகிற்கு காட்டிய உங்களை பாராட்டுகிறேன்.
- எங்கள் ஆலயங்களில் பூட்டுகள் இல்லை. வாயில்கள் இல்லை. காரணம் எங்கள் ஆலயங்களில் அனைவரும் எங்களிடம் வரலாம். இதை நீங்கள் உலகிற்குக் காட்டிவிட்டீர்கள். அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.
- காயமடைந்த ஒரு மனிதனின் சக்திவாய்ந்த படத்தை உலகம் பார்ப்பதற்கு நீங்கள் அனுமதித்ததற்காக உங்களைப் பாராட்டுகிறேன். விசுவாசத்தின் பிரகடனமும், இயேசுவின் முழுமையான நம்பிக்கையுமாக அவரது குறியீட்டு விரலை உயர்த்தினார்.
- சர்ச்சுகள், (ஆலயங்கள்), அரசுகள், சமுகங்கள் அனைவரும் எங்களோடு ஒற்றுமையாக இருக்க நீங்கள் வழி காட்டியதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.
- வீடுகளில் இருந்த எண்ணற்ற இலங்கை மக்களை வீடுகளில் இருந்து அருகில் உள்ள ஆலயங்களுக்கு வரச்செய்தீர்கள். அவர்கள் தங்களின் அன்பின், சமாதானத்தின் வெளிப்பாடாக அழகிய மலர்களை எடுத்து வந்தார்கள். அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.
- பல இதயங்களை நீங்கள் உடைத்து விட்டீர்கள். இந்த உலகத்தை கண்ணீர் வெள்ளத்தில் மூழ்க விட்டீர்கள். ஆனால் நீங்கள் செய்தவையெல்லாம் எங்களை இன்னும் நெறுக்கமாகக் கொண்டு வந்திருக்கிறது. அது எங்கள் விசுவாசத்தையும், பலத்தையும் பலப்படுத்தியுள்ளது.
- வரவிருக்கும் வாரங்களில் அதிகமான மக்கள் நீங்கள் மிகவும் வெறுக்கிற ஒரு இடமான ஆலங்களில் கூடுவார்கள். எங்களிடம் இருந்து பிரிந்து சென்ற எங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளால் ஈர்க்கப்படுவார்கள். எங்கள் விசுவாசம் பலப் படுத்தப்படும்.

- வரும் வாரங்களில் மற்ற சபையைச் சேர்ந்த விசுவாசிகள் அதிகமான மக்கள் அருகில் உள்ள ஆலயங்களுக்கு அழகிய மலர்களோடும், கையால் எழுதப்பட்ட குறிப்புகளோடும் வருவார்கள். அவர்களுக்கு முன்பு தங்கள் பகுதியில் உள்ள ஆலயங்கள் எங்கு உள்ளது என்று தெரியாது. ஆனால் இப்போது அவர்களுக்குத் தெரிகிறது. எல்லாவற்றுக்கும் காரணம் நீங்கள்தான்.
- நீ உன்னுடைய அழிவின் இலக்கை அடைந்திருக்கலாம். ஆனால் எங்கள் அனைவருக்குள்ளும் வெறுப்பு, அச்சம் மற்றும் விரக்தியைத் தூண்டுவதில் நீ தவறிவிட்டாய் என்று நான் நினைக்கிறேன்.
- உங்களுடைய திட்டங்களை நான் புரிந்துக்கொள்ளும் போது உங்கள் விரிவான திட்டமிடலின் பின்னும் கிறிஸ்தவர்களையும் மற்ற மதத்தினரிடையும் நீங்கள் ஏற்படுத்த நினைத்த பிரிவினையை உங்களால் உண்டாக்க முடியவில்லை. இதற்காக நான் வருந்துகிறேன் என்று சொல்ல முடியாது.

ஜெபிப்போம்! ஜெபிப்போம்!! ஜெபிப்போம்!!!

- கிறிஸ்தவ அருட்சகோதரி -

## என்னையும் கொன்றுவிடு ...



ஒரு நாள் ISIS தீவிரவாதிகள் காரில் சென்றுகொண்டிருந்த ஒரு குடும்பத்தை வழிமறித்தனர்.

ISIS தீவிரவாதி -

"நீ எந்த மதம்?"

அந்த மனிதர் -

"நாங்கள் முஸ்லிம்"

(அவர்கள் உண்மையில் கிறிஸ்தவரகள்)

ISIS தீவிரவாதி -

"அப்படியானால் குரானிலிருந்து சில வரிகளை சொல் பார்க்கலாம்"

(காரில் இருந்தவரின் மனைவி நடுங்கிவிட்டாள்)

ஆனால் அவர் சிறிதும் தயக்கமின்றி பைபிளில் இருந்து சில வரிகளைக் கூறினார்.

ISIS தீவிரவாதி -

"சரியாகக் கூறினாய் நீ செல்லலாம்"

(கார் சிறிது தூரம் நகர்ந்ததும்)

அவரின் மனைவி -

"எப்படி சிறிதும் பயமின்றி குரானுக்குப் பதிலாக பைபிலை கூறினீர்கள், ஒரு வேளை அந்த தீவிரவாதி கண்டுபிடித்திருந்தால் நம் நிலை என்னாவது?"

அதற்கு அவர் -

"அவர்களுக்குக் குரான் தெரியாது!"

மனைவி -

"அது எப்படி உங்களுக்கு தெரியும்.

அவர் சிரித்துக்கொண்டே

"அவர்கள் குரானை முழுவதும் படித்துப் புரிந்து கொண்டிருந்தால் ஆயுதம் ஏந்தி அப்பாவி மக்களை கொலை செய்யும் தீவிரவாதிகளாக மாறியிருக்கமாட்டார்கள்".

எந்த ஒரு மதமும் கொலை செய்ய சொல்லவில்லை.
தீவிரவாதிகளுக்கு மதமும் கிடையாது,
மனமும் கிடையாது.

"கருணையில்தான் ஒரு மதத்தின் ஆணிவேரே அடங்கியிருக்கிறது"
*- ஔவையார்*

"யாருக்கும் ஒரு துன்பமும் விளைவிக்காதவனே கனவான்" *- நீயூமன்*

"பிறருடைய துன்பத்திற்கு எந்தவிதத்திலும் ஒருவன் காரணமாக இருக்கக்கூடாது"



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 14

1) சமூகப் பிரச்சினைகளின் தீர்வுக்கு அடிப்படையாக இருக்கிற 4 முக்கிய கிறிஸ்தவ எவை? ..........

2) உலகில் வேறு எவரையும் விட அதிகமான தோல்விகளைச் சந்தித்தவர் யார்?

3) அமெரிக்க நாட்டில் நிறவெறிக்கு எதிராகப் போராடியவர் யார்? அவரது இலக்கு எதுவாக இருந்தது?

4) "உண்பதிலிருந்தும், பருகுவதிலிருந்தும் விலகியிருப்பதன் பொருள் நோன்பல்ல. மாறாக, தீய செயல்களிலிருந்தும், வீணான காரியங்களிலிருந்தும் விலகியிருப் பதே உண்மையான நோன்பு" எனக் கூறியவர்:

5) திருத்தந்தை பிரான்சிஸின் "Tips for a Happy Life" என்ற புதிய பத்துக் கட்டளைகளில் இரண்டாவது கட்டளை எது? ..........

6) ஆஸ்திரேலிய கண்டத்தில் முதன் முதலில் உருவான உயிரினம் எது என விஞ்ஞானி கள் கூறுகின்றனர்? ..........

7) யூதருக்குத் தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருந்தது எது?

8) "அல்லேலூயா" கீதம் பாடப்படாத காலம் எது? அது மீண்டும் எப்போது பாடப்படுகிறது?

9) "நல்ல காரியங்களை நாமாகத் தேடிச் செய்ய வேண்டுமே தவிர, நல்ல காரியங்கள் தாமாக வந்து சேருவதில்லை" எனக் கூறியவர் யார்?

10) அண்மைக் காலமாக பயிர்களைத் தாக்கமடையச் செய்யும் காரணி எது?

பெயர் : ..........

முகவரி : ..........

பங்கு / தொ.பே.இல : ..........

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 14**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.05.2019



191

1 சாமுவேல் 21:1-15, 22:1-23

திருவிவிலியம் கற்போம்

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.04.2019

## சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக

1. பின்பு தாவீது நோபில் இருந்த குரு அகிமெலக்கிடம் சென்றார். அகிமெலக்கு தாவீதை நோக்கி ...................... வந்து அவரிடம் "நீ ஏன தனியே இருக்கிறாய்? உன்னுடன் யாரும் வரவில்லையா?" என்றார்..

   அ) பயத்துடன் ஆ) அச்சத்துடன் இ) நடுக்கத்துடன்

2. ஆதலால் குரு ...................... அவருக்கு அளித்தார். ஏனெனில் ஆண்டவரின் திரு முன்னிலையில் அப்பத்தைத் தவிர வேறு அப்பம் அங்கு இல்லை. அது எடுக்கப்படும் நாளில் அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் அங்கு வைக்கப்படும்.

   அ) தூய அப்பத்தை ஆ) சாதாரண அப்பத்தை இ) வேறு அப்பத்தை

3. "நீ விரும்பினால் அதை எடுத்துக்கொள்ளலாம்! அதைத் தவிர வேறு வாள் இல்லை" என்று கூறினார். அதற்குத் தாவீது "அதற்கு ...................... வேறில்லை. அதை எனக்குத் தாரும்" என்றார்.

   அ) இணையானது ஆ) சமமானது இ) நிகரானது

4. அதனால் தம் முகத் தோற்றத்தை மாற்றிக்கொண்டு வாயிற் கதவுகளில் கிறுக்கிக்கொண்டு தாடி வழியே வாயிலிருந்து ...................... ஒழுகச் செய்து அவர்கள் முன்னிலையில் ஒரு பைத்தியக்காரன் போல் நடித்தார். அப்பொழுது ஆக்கிசு தன் அலுவலர்களிடம் 'இதோ இம்மனிதனைப் பாருங்கள். இவன் ஒரு பைத்திக்காரன்!"

   அ) நுரை ஆ) எச்சில் இ) இரத்தம்

5. அவருடைய சகோதரரும், அவர் தந்தை வீட்டாரும் இதைக் கேள்வியுற்று அங்கு அவரிடம் சென்றனர். ...................... கடன்பட்டோர், சோர்வுற்றோர் யாவரும் அவரிடம் ஒன்று திரண்டனர். அவர்களுக்கு அவர் தலைவரானார். இவ்வாறு அவரோடு சுமார் நானூறு பேர் இருந்தனர்.

   அ) ஒதுக்கப்பட்டோர் ஆ) ஒடுக்கப்பட்டோர் இ) ஓரங்கட்டப்பட்டோர்

6. தாவீதும் அவருடன் இருந்த வீரர்களும் கண்டுபிடிக்கப்பட்டதைச் சவுல் கேள்விப்பட்டார். ...................... இருந்த மலைமீது தமாரிஸ்கு மரத்தின் கீழ் சவுல் கையில் தன் ஈட்டியை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அவருடைய எல்லா அலுவலர்களும் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

   அ) லெபனோனில் ஆ) எர்மோனில் இ) கிபயாவில்

7. அப்பொழுது சவுலின் பணியாளருடன் நின்ற ஏதோமியனாகிய தோயேகு "...................... உள்ள அகித்தூவின் மகன் அகிமெலக்கிடம் ஈசாயின் மகன் தாவீது வருவதை நான் கண்டேன். ....

   அ) நோபில் ஆ) ஏலாமில் இ) தமஸ்குவில்

8. அதற்கு அகிமெலக்கு அரசரிடம், "உம் பணியாளர் அனைவரிலும் தாவீதைப் போல் ...................... யார்? அரசராகிய உமக்கு மருமகனும் மெய்க்காப்பாளர் தலைவனுமாகிய அவன் உம் வீட்டாரிடையே மேன்மை பெற்றவன் அன்றோ?

   அ) நேர்மையுள்ளவன் ஆ) வீரமுள்ளவன் இ) உண்மையுள்ளவன்

9. அரசர் தம்மைச் சூழ்ந்து நின்ற காவலர்களிடம், "நீங்கள் சென்று ஆண்டவரின் ...................... கொன்று விடுங்கள்! ஏனெனில் அவர்கள் தாவீது ஓடிப் போனதை அறிந்தும் அதை எனக்குத் தெரிந்திருக்கவில்லை" என்றார்.

   அ) பணியாளர்களைக் ஆ) சீடர்களைக் இ) குருக்களைக்

10. என்னோடு தங்கு! ......................! என் உயிரைப் பறிக்கத் தேடுகிறவன்தான் உன் உயிரையும் பறிக்கத் தேடுவான். ஆனால், என்னோடு நீ இருந்தால் பாதுகாப்புடன் இருப்பாய்" என்றார் .

    அ) அஞ்சாதே ஆ) கலங்காதே இ) திகையாதே

நீ வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது

# அறிவை வளர்ப்போம் - 191



**பரிசுப் போட்டி**

(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
31.05.2019

1. விண்வெளியின் அளவுகோல் :
   (பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள உண்மையான தூரம்
   - பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள உண்மையான தூரம்
   - சந்திரனுக்கும் சூரியனுக்கும் உண்மையான தூரம்)

2. இரண்டாம் சந்திரகுப்தருக்கு இன்னொரு பெயர் :
   (விக்ரமாதித்தியர் - சமுத்திரகுப்தர் - வராகமிகிரர்)

3. ஒலிம்பிக் போட்டிகளில் நெடுந்தூர ஓட்டப்பந்தயத்தின் (Marathon) துஸரம் :
   (40.19 கிலோ மீற்றர் - 42.19 கிலோ மீற்றர் - 41.19 கிலோ மீற்றர் )

4. எந்த இரத்த வகை பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையது?
   (A இரத்தவகை - O இரத்தவகை - AB இரத்தவகை)

5. "ஒரு காசு பேணின் ........................ காசு தேறும்"
   (பல - நூறு - இரு)

6. "பூங்குழல் வந்தாள்" என்பது,
   (பண்புத் தொகை - அன்மொழித்தொகை - உம்மைத்தொகை)

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தபாலகம் / தொ.பே.இல:

..............................................................

பரிசு அனுப்பவேண்டிய பங்கு:

..............................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 191
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.




# போட்டி முடிவுகள்...

**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 189,**
பங்கு பற்றியோர் 24 பேர், இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதியோர் 10 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 189 விடைகள்

யோனாத்தானின், மேலங்கியை, வெற்றியை, சவுலை, சினமுற்று, யாழ், மேராபு, மருமகனாய், ஆண்டவர், புகழ்

## அறிவை வளர்ப்போம் - 189 விடைகள்

1. சிலக்கன்
2. காற்றை அளக்கும் கருவி
3. கியூபா
4. படிகவிழா
5. இழி
6. ஃபார்மோசா

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 1ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:

* M. அன்று ஹர்ஷன்,
140B, கோயில் வீதி,
கல்முனை - 02.

* A. விவிலியா,
5ம் குறுக்கு,
திருப்பெருந்துறை.

* ஷனோ சில்வா,
81/38, நாவலர் வீதி,
கருவேப்பங்கேணி,
மட்டக்களப்பு.

* S. சேஷா,
பன்சாலை வீதி,
அக்கறைப்பற்று - 8/3.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 141 முடிவுகள்

**1ம் பரிசு** - 400/=

* J. மேஷாக்,
385/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு** - 300/=

* I. ஆன் மிரியாம்,
11/3, 7ம் குறுக்கு,
கல்லடி, டச்பார்,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு** - 200/=

* ஜெயராஜ் வர்தீஸ்,
204 A, திராய்மடு, கொக்குவில்,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**



பொழுதை மகிழ்ச்சியாக களிக்க இவன் இத்தனை தேசம் தாண்டி இலங்கை வந்து, இன்று மனைவி மகனை இழந்து, தன் மகளுக்காய் மனதை இறுக்கிச் செல்கிறான். இதை விட இனி என்ன நடக்க போகிறது என்ற எண்ணம் அவன் முகத்தில் தெரிகிறது. அவன் கைகளில் இருக்கும் தண்ணீர் நிச்சயம்


மதி கெட்ட மடையர்கள் தேசத்தில் இருந்து
உன்னிடம் ஒரு மன்னிப்பு.











"அவர்கள் செய்த
காரியங்கள்
இறந்த
எங்கள் மக்களை
வேத சாட்சிகளாக
மாற்றியுள்ளது"